janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூலை 17 - 23 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 15




**புறவாசல்வழி பா.ஜ.க. வெற்றி**

மக்களை பிளவுபடுத்தி மோதவிட்டு, நரித்தனத்தோடு, அதிகாரத்தை சுவைப்பதே வலதுசாரி வகைப்பட்ட பாசிச அரசியலின் >>>



ப 03

**சுயமரியாதைக்குப் பங்கம் ஏன்?**

“உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், முறைகேடுகளில் ஈடுபட்டால் நானே சர்வாதிகாரியாக மாறி நடவடிக்கை >>>



ப 08


**குரங்கு கையில் பூமாலை**

அதிமுகவின் உச்சகட்ட உட்கட்சி சண்டை ஊடகங்களை ஆக்கிரமித்துள்ளது. இது அண்ணாமலையின் அதிரடி அறிக்கைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டது. >>>



ப 05

# ஆக்ரோஷ வடிவில் மோடியால் திறக்கப்பட்ட அசோக சிங்கங்கள்



## இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம்

**புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய சின்னத்தில் இடம்பெற்றுள்ள அசோக சிங்கங்களை பிரதமர் மோடி அவமதித்து விட்டதாக இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.**

இந்தியாவுக்கான புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டப்பட்டு வரும் நிலையில், இந்த கட்டிடத்தில், மக்களவையில் 888 உறுப்பினர்களும், மாநிலங்களவையில் 384 உறுப்பினர்களும் மற்றும் கூட்டு கூட்டத்திற்கு 1,272 இடங்களும் இடம் பெறும் என கூறப்படுகிறது. ரூ.971 கோடி ரூபாய் மதிப்பில், 62,000 சதுர மீட்டரில் முக்கோண வடிவில் இந்த புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், நில அதிர்வு ஏற்பட்டாலும், அதனை தாங்கும் வகையில் இந்த பிரமாண்ட நாடாளுமன்ற கட்டிடம் அமைக்கப்பட்டு வருகிறது. நாடே கொரோனா பெருந்தொற்றில் இடர்பட்டு நின்ற போதும் இதற்கான பணி இடையறாது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் கூரையில் தேசிய சின்னத்தை வார்ப்பதற்கான கருத்துரு மற்றும் செயல்முறையானது களிமண் மாடலிங் மற்றும் கம்ப்யூட்டர் கிராஃப்பிக்ஸ் முதல் வெண்கல வார்ப்பு மற்றும் மெருகூட்டல் வரை 8 வெவ்வேறு நிலைகளில் தயாரிக்கப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் மேல்கூரையில் 6.5 மீட்டர் நீளமும், 9.5 டன் எடையும் உடைய வெண்கலத்திலான பிரமாண்ட தேசிய சின்னத்தை பிரதமர் திறந்து வைத்தார். நாடாளுமன்ற கட்டிடத்தின் மீது தேசிய சின்னம் திறந்து வைக்கப்பட்டதில் குறைபாடு உள்ளதாக இடதுசாரிகள், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் ஏ.ஐ.எம்.ஐ.எம். உள்ளிட்ட எதிர்கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பிரதமரின் இந்த செயல், அரசியலமைப்பு மீறல் என குற்றம் சாட்டின.

இதனிடையே, தேசிய சின்னத்தை பிரதமர் மோடி அவமானப்படுத்தி விட்டதாக திரிணாமுல் காங்கிரஸ் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். அக்கட்சியின் எம்.பிக்களான ஜவஹர் சிர்கார் மற்றும் மஹுவா மொய்த்ரா ஆகியோர் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் மேல் நிறுவப்பட்டுள்ள தேசிய சின்னத்தின் அசோக சிங்கத்தை அவமதித்துவிட்டதாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதேபோல், மாநிலங்களவை உறுப்பினர் ஜவர் சிர்கார் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், நமது தேசிய சின்னத்தில் உள்ள சிங்கம் சாந்தமாக அதேவேளையில் கம்பீரமாக தோற்றமளிக்கும் என குறிப்பிட்டுள்ளார். ஆனால், புதிதாக நிறுவப்பட்டுள்ள சிலையில் உள்ள சிங்கம், ஆக்ரோஷமாக இருப்பதுபோல் உள்ளது என குறிப்பிட்டுள்ளார். அதோடு அதன் உருவம் சீராக இல்லாமல் அதிக அகலம் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இடது புறத்தில் அழகாக உள்ளது அசல் என்றும், வலதுபுறத்தில் வைக்கப்பட்டிருப்பது மோடியின் பதிப்பு என்றும் விமர்சித்தார். இந்த அவமானத்தை உடனே மாற்றுங்கள் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேபோல், நாடாளுமன்ற உறுப்பினர் மஹுவா மொய்த்ரா, அசோக சிங்கங்களின் பக்கவாட்டு படத்தை ட்வீட் செய்துள்ளார். புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் கூரையில் நிறுவப்பட்ட வெண்கல மற்றும் எரிந்த வார்ப்புகளுடன் கடந்தகால சிற்பத்தை ஒப்பிட்டுள்ளார்.

முன்னாக, டி.எம்.சி. எம்.பி. ஜவர் சிர்கார் கூறுகையில், நாடாளுமன்ற கட்டிடத்தில் இடம்பெறும் நாடாளுமன்ற எம்.பிக்களுடன் கலந்து ஆலோசிக்கப்படவில்லை என கூறினார். மேலும், மோடி தனது க்ரோனி கட்டிடக் கலைஞரால் அதிக செலவில் வடிவமைக்கப்பட்ட ஒரு சாதாரண கட்டிடக்கலை மூலம் சிதைத்துள்ளார் என்றும் குற்றம் சாட்டினார்.

மொத்தத்தில் ஒரு தேசிய சின்னத்தை சின்னாபின்னமாக்கி விட்டது ஒன்றிய உருப்படாத பா.ஜ.க. அரசு!



**பகத்சிங் பெயரால் சபதம் ஏற்போம்!**

**பாசிச வகுப்புவெறி சக்திகளை முறியடிப்போம்!**

**திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!**

## கட்சிக் கடிதம்





# இரத்தம் சிந்தியவர்கள்



**பேரன்புமிக்க தோழர்களே!**

**நாட்டின் விடுதலைப் போர்க் களத்தில் முன்னத்தி ஏராக நின்று பணியாற்றிய நமது பெரும் படையின் மாநாடு திருப்பூரில் கூடுகின்றது.**

நாட்டின் விடுதலைப் போரில் எள் முனையளவும் பங்கேற்காத, குண்டுமணி இரத்தத்தை சிந்தாத, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பூட்ஸ் காலை நக்கிப் பிழைத்த நாசகரக் கூட்டம் நாடாளுகின்றது.

இது நமது நாட்டின் விந்தையாகும். எத்தகைய தியாகத்திற்கும் உட்படாத கூட்டம், காட்டிக்கொடுத்திட்ட கருங்காலி கூட்டம் இன்று நாட்டை ஆளுவது மட்டுமல்ல, நாட்டையே ரத்தக்களறியாக்கி வருகின்றது.

விடுதலைப் போர்க் களத்தில் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், சீக்கியர், பௌத்தர், ஜைனர் என எவ்வித மத வேறுபாடுகளும் இன்றி, ஒன்றுபட்டு, ஓரணியாய் நின்று வெள்ளையனே, அந்நியனே வெளியேறு என்று ஓங்கி ரீங்காரமிட்ட நம் மக்களை இன்று மத ரீதியாக பிளவுபடுத்தி, ஒருவரோடு ஒருவரை மோதச் செய்து, தனது அற்பத்தனமான அரசியல் ஆதாயத்திற்காக நாட்டையே ரத்தக்களறியாக்கி வருகின்றது.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு குறித்து கவலை கொள்ளாஸ் தவர்கள், எரிகின்ற வீட்டில் இழுத்தது லாபம் என்ற குறுகிய நோக்கமுடையவர்களைக் கண்டு நம் நெஞ்சம் பதறுகின்றது.

ஏனெனில் உருவாக்கியவன் கவலைப்படாமல் என்ன செய்ய முடியும்? பரிபூரண சுதந்திரம் வேண்டும் என்கிற முழக்கத்தை முன்வைத்தவர்கள் நாம்தான் என்பதனை நாட்டின் முழு வரலாறு அறிந்தோர் அனைவரும் உணர்வார்கள்.

தீர்மானம் கொண்டு வந்தவர்கள் பெரும் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றவர்கள் மட்டுமல்ல, அத்தகைய தீர்மானம் செயல்பாட்டுக்கு வருவதற்காக நாடு முழுவதும் மக்களைத் திரட்டி பெரும் போர்க்களம் கண்ட மாவீரர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதனையும் வரலாறு அறிந்தோர் அறிவார்கள்.

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலை சுவர்களும், அதில் பொருத்தப்பட்டுள்ள ஜன்னல், கதவு, கம்பிகளும் கம்யூனிஸ் டுகளின் வீரத்தை, தியாகத்தை எடுத்துக்கூறும்.

1925ஆம் ஆண்டு தொடங்கிய கம்யூனிஸ்ட் பேரியக்கம் தொடங் குவதற்கு முன்பிருந்தே, கம்யூனிஸ்ட் என கூறிக்கொள்ளும் ஒவ்வொரு தோழரும், விடுதலைப் போராட்ட களத்தில் முதல் சிப்பாயாக களம் கண்டனர்.

1947 நாடு விடுதலை பெறுகின்ற வரையில் நம் போராட்டம் தொடர்ந்தது.

அரசியல் விடுதலைப்போரில் பங்களிப்பு செய்தது மட்டுமின்றி, சமூக, பொருளாதார விடுதலைக்கும் நமது போராட்டம் தொடர்கிறது.

இத்தகைய இடைவிடாத போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கிய, கோரக் கரங்களை உடைய வெள்ளை ஏகாதிபத்தியத்தை பணிய வைத்தது.

தொழிலாளர்களுக்கான உரிமைகள், விவசாயிகளுக்கான உரிமைகள் என பல்வேறு வெற்றிகளை கண்டது.

நாடு முழுவதும் நிலவிய சமூகக் கொடுமைகளுக்கு எதிரான நம் போராட்டம் வரலாற்றில் என்றென்றும் அழிக்க முடியாது.

நாட்டின் விடுதலைக்குப் பின்னரும் இன்றும் நம் போராட்டம் தொடர்கின்றது.

அன்று தொட்டு இந்நாள் வரை நடைபெற்று வரும் போராட்டங்கள் அடையாளப் போராட்டமல்ல.

நாளேடுகளில், தொலைக்காட்சிகளில் தங்களின் முகம் வரவேண்டும், பெயர் வரவேண்டும் என்பதற்காக நடத்தப்படுகின்ற போராட்டமல்ல.

மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று உயிர்த்துடிப்போடு நடைபெற்று வருகின்ற போராட்டம்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே உணவு, ஒரே உடை, ஒரே மதம் என்ற நடைமுறை சாத்தியமற்ற முழுக்கம் மட்டுமல்ல, மாறாக அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது. நாட்டையே பிளவுபடுத்தும் நயவஞ்சகக் குரலை எழுப்புகின்றார்கள்.

ஆனால், நாம் முன்வைக்கும் முழக்கம் இன்று அல்ல, அன்று தொட்டு முன்வைக்கும் முழக்கம் என்பது ஒரே நாடு, ஒரே வாழ்க்கை என்பதாகும்.

இந்தியா என்கிற பெரும் நாட்டில், 130 கோடி மக்களைக் கொண்ட பெரும் நாட்டில், வாழும் மக்களிடையே நிலவி வருகின்ற ஏற்றத்தாழ்வை அகற்று.

ஆம் எங்களின் முழக்கம், எங்கள் மகாகவி பாரதி எழுப்பிட்ட போர் முழக்கம்.

“முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை – வாழ்க !”

கவிதையில் இடியென பாரதி முழங்குகிறான்; கம்பீரமாக முழங்குகிறான்.

“இனியொரு விதிசெய் வோம் – அதை
எந்த நாளும் காப்போம்,
தனியொரு வனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் – வாழ்க !”

இத்தகைய சமுதாயம் காணவே அன்றுமுதல் இன்றுவரை போராடுகின்றோம். நாளையும், முன்னைக் காட்டிலும் தீவிரமாய் போராடுவோம்.

போராட்டக் களத்தில் நாங்கள் இழந்தது சாதாரண இழப்பல்ல. விலை மதிக்க முடியாத மனித குல மாணிக்கங்களை இழந்தோம்.

அத்தகைய மாணிக்கங்களின் நினைவாக தியாக சுடர்கள் திருப்பூர் நோக்கி வருகின்றன.

நாட்டின் விடுதலைக்கு முன்னர் பஞ்சாலை முதலாளிகளின் சுரண்டலுக்கு எதிராக, அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட காவல்துறைக்கு எதிராக, ஆலை முதலாளிகளுக்கு அடியாட்களாக செயல்பட்ட ரவுடிகளுக்கு எதிராக களம் கண்ட நம் நாயகர்கள் ராமையன், வெங்கடாசலம், ரங்கண்ணன், சின்னையன் என நால்வரும் தூக்கிலிட்டு கொல்லப்பட்டார்கள்.

சின்னியம்பாளையம் தியாகிகள் என போற்றப்படும் இம் மாவீரர்களின் நினைவு ஜோதி கோவை சின்னியம்பாளையத்தில் இருந்து திருப்பூருக்கு எடுத்து வரப்படுகின்றது.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஜாலியன் வாலாபாக் படுகொலை அழிக்கொண்ணா துயர வரலாறு ஆகும்.

அத்தகைய படுகொலை நாட்டின் விடுதலைக்கு முன்னர், வெள்ளையர்கள் ஆட்சி காலத்தில் நடைபெற்ற கோரத்தின் உச்சமாகும்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்று, நாட்டின் விடுதலைக்குப் பின்னர் தமிழ்நாட்டில் 1950ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் நடைபெற்றது.

சேலம் சிறைச்சாலையில் இந்து, முஸ்லிம், தமிழன், மலையாளி என்கிற வேறுபாடு இன்றி இருபத்தி இரண்டு தோழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

**ஒரே இடத்தில், ஒரே நேரத்தில், இரக்கமற்ற முறையில், காவேரி முதலியார், ஆறுமுகம், சேக் தாவூத், என்.பாலன், என்.பத்மநாபன், கே.என்.கோரன், என். கண்ணன், எம்.கே. கோபாலன் நாயர், பி. கோபாலன் நாயர், நாராயண நாயர், ஏ.கே.குஞ்சப்பன், குஞ்சிராமன், குன்ஞாம்பு, ம.கோரன், களத்துகோ–யிலோடன், எம்.நாராயண நம்பியார், பி.கோவிந்த நம்பியார், குஞ்சன் நம்பியார், அம்பாடி ஆசாரியார், ஓ.பி.அனந்தன் நம்பியார், டி.இராமன் நம்பியார் மற்றும் எம்.கோபாலன் குட்டி நாயர் என இருபத்தி இரண்டு மாசில்லா மாணிக்கங்களை, மக்களுக்காக போராடிய வேங்கைகளை இரக்கமற்ற முறையில் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு பலியாக்கினார்கள்.**

**அம்மாபெரும் தியாகிகள் நினைவைப் போற்றும் வண்ணம் சேலம் சிறை தியாகிகள் சுடர் திருப்பூருக்கு வருகின்றது.**

கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர் மாவட்டங்களில் இருந்து தியாகிகளை நினைவு கூர்ந்து, தியாக தீபங்கள் வலம் வர இருக்கின்றன. தியாக ஜோதிகளை நமது மதிப்பு மிக்க தலைவர்கள் மாநாட்டு அரங்கில் பெற்றுக் கொள்வார்கள்.

மாநாட்டு முகப்பில் தியாக தீபத்தை மூத்த தோழர் திருப்பூர் ஜி.காளியப்பன் ஏற்றி வைக்கின்றார்.

நாட்டையே இரத்தக் களரியாக்கி கொண்டுள்ள பாசிச கும்பலை தோலுரிக்க இரத்தம் சிந்திய நம்முடைய தியாக சீலர்களைப் போற்றுவோம்.

ஆகஸ்ட் 9ஆம் நாள் நடைபெறவுள்ள பேரணியில் பேரணியாய் பங்கேற்போம். நாட்டையும், மக்களையும் காக்க தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட பெரும் படையே, போர்படையே செஞ் சட்டை அணிந்து வா! செங்கொடி தாங்கி வா!


எங்களை புரிந்து கொள்வாய் என தாய்நாட்டிற்கு உணர்த்திட செய்வாய்!

குடும்பத்தோடு குதூகலமாய் வீறுகொண்டெழுந்து வா!
வெற்றி நடை போட்டு வா! வா!

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



# புறவாசல் வழி பா.ஜ.க. வெற்றி



த.லெனின்

**மக்களை பிளவுபடுத்தி மோதவிட்டு, நரித்தனத்தோடு, அதிகாரத்தை சுவைப்பதே வலதுசாரி வகைப்பட்ட பாசிச அரசியலின் பொதுத் தன்மையாகும். இதற்கு ஏற்ற வகையில் செயல்படுவதுதான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் வழிநடத்தப்படும் பா.ஜ.க.**

பா.ஜ.க. ஒரு வேறுபட்ட கட்சி, புதிய வகைப்பட்ட கட்சி, மாறுபட்ட முறையில் சிந்தித்து செயல்படுவதாக தன்னை எப்போதும் கூறிக் கொள்ளும். ஆனால், மக்களை கூறுபோட்டு, மோதவிட்டு அதிகாரத்திற்கு வரும் என்பதை அதன் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தெளிவாக்கி வருகிறது.

இது கலவரங்கள் மூலம் தேர்தல் நிலவரங்களை தன்னைச் சார்ந்து கட்டியெழுப்பும் வகுப்புவாத விஷ அரசியலை அடித்தளமாகக் கொண்டதாகும்.

வாஜ்பாய், அத்வானி காலம்வரை ஒழுக்கம் சார்ந்து இயங்குவதாக ஒரு பிம்பம் காட்டப்பட்டது. ஆனால் இப்போது அது நொறுக்கப்பட்டு அதிகாரக் கோர பற்களை காண்கிறோம்.

மோடியும் – அமித்ஷாவும் கடந்து வந்தபாதை அவர்களது சொந்தக் கட்சியிலும் பல திடீர் திருப்பங்களையும், திகிலும் நிறைந்த காட்சிகளாக விரிகிறது.

குஜராத்தில் பா.ஜ.க.வை வளர்த்த மூத்த தலைவர் கேசுபாய் பட்டேல் இரண்டுமுறை அம்மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார். இவரை எதிர்த்துதான் வகேலா அங்கு கட்சிக்குள் ளேயே கலகம் செய்தார். பா.ஜ.க.வை உடைத்து சட்டமன்ற உறுப்பினர்களோடு வெளியேறி காங்கிரசுக்கு உதவியவர். வயது மூப்பின் காரணமாக கேசுபாய் பட்டேலின் அரசு செயல்பாடு குன்றி ஊழலில் திளைத்த போது, பூஜ் பகுதியில் ஒரு பெரும் பூகம்பத்தையும் அது எதிர்கொண்டது.

இந்த நிலையில்தான் அன்றைய பிரதமர் வாஜ்பாய் ஒரு புதிய முகம் தேவை என்று மோடியை தேர்ந்தெடுக்கிறார்கள். கேசுபாய் அரசில் உள்துறை அமைச்சராக இருந்த ஹெரன் பாண்டியா ஆர்.எஸ்.எஸ்.சின் தீவிர உறுப்பினராவார். அவர் அகமதாபாத்தில் கடந்த 2003ஆம் ஆண்டில் ஒரு காலை நேர நடை பயிற்சிக்கு பிறகு அவரது காரில் ஓய்வாக அமர்ந்திருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இன்றுவரை அந்தக் கொலையாளிகள் மீது எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை என்று அவரது மனைவி ஜக்குருதி பாண்டியா கூறுகிறார்.

என்ன செய்தி என்றால், இவர் மோடியை கடைசிவரை எதிர்த் தவர். அதனால் தான் இவர் கொல்லப்பட்டார் என்று சங்கப் பரிவா ரங்களுக்குள்ளேயே ஒரு பேச்சும் உண்டு.

மோடி முதலமைச்சாரன பிறகு அவரது அமைச்சரவையில் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த ஆனந்தி பென்பட்டேல் மீது மோடி செல்வாக்கு செலுத்துகிறார் என்று அவரது கணவர் மபட்லால் பட்டேல் அன்றைய பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம் எழுதியது பிரசித்தமானது. ஆனால், பின்னர் ஆனந்தி பென் பட்டேல் முதல்வராகவும் ஆக்கப்பட்டார். அமித்ஷா மோடிக்கு அனைத்து வகைகளிலும் உதவி புரிந்தும், கட்சிக்குள் இருந்த எதிர்ப்பாளர்களை அப்புறப்படுத்தியும் மோடியின் பிம்பத்தை நிலை நிறுத்தியவர் ஆவார்.

மிகவும் பணம் கொழிக்கும் கிரிக்கெட் வாரியமான குஜராத் கிரிக்கெட் வாரியத்தின் பொறுப்பை அமித்ஷா கைப்பற்றினார். அன்றைய தலைவரும் காங்கிரஸ் அனுதாபியுமான நாகிரி அமின் கடந்த 2012ஆம் ஆண்டு பா.ஜ.க.வுக்கு தாவினார். மீண்டும் அவருக்கு சூரத் மாவட்ட கிரிக்கெட் வாரிய பதவி அளிக்கப்பட்டது. அவர்தான் கடந்த 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமித்ஷாவின் மகன் ஜெய்ஷாவை அந்த அமைப்பிற்கு துணைச் செயலாளராக தேர்ந்தெடுத்தவர்.

அரசியலில் மட்டும் ஆள் பிடிக்கவில்லை. பணம் கொழிக்கும் கிரிக்கெட் வாரியத்திலும், ஆள்பிடிப்பதை ஒரு அரசியல் கலையாகவே மேற்கொண்டதை இதன் மூலம் அறிய முடியும்.

மத்தியில் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. கடந்த எட்டு ஆண்டுகளில் எண்ணற்ற கட்சிகளை பிளந்து பல மாநிலங்களில் ஆட்சிக்கு வந்தது. இப்படி கட்சியை உடைத்து ஆட்சிகளை கவிழ்த்ததன் மூலம் பத்து மாநிலங்களில் ஆட்சிக்கு வந்துள்ள பா.ஜ.க. மற்றவர்களுக்கு எந்த வகையில் வேறுபட்ட கட்சி?

மகாராஷ்டிர அரசியல் களத்தில் தனது முந்தைய கூட்டணிக் கட்சியான சிவசேனாவில் ஏக்நாத் சிண்டேவை ஊக்கப்படுத்தி 40க்கும் மேற்பட்ட சிவசேனா எம்.எல்.ஏ.க்களை கவர்ந்திழுத்து உத்தவ் தாக்கரே ஆட்சியை கவிழ்த்து புறவாசல் வழியாக ஆட்சிக்கு வந்துள்ளனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் 15இடங்களில் காங்கிரஸ் வென்றது. தி.மு.க. ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்தது. நான்கு ஆண்டுகள் ஒன்பது மாதங்கள் அந்த ஆட்சி நீடித்த நிலையில் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள், 6 எம்.எல்.ஏ.க்களை பா.ஜ.க. பாச வலை விரித்து இழுத்து முதல்வர் நாராயணசாமி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்தது. இதற்காக மூன்று நியமன எம்.எல்.ஏ.க்களை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு தெரியாமல் கவர்னரே விதிகளுக்குப் புறம்பாக நியமித்து அந்த ஆட்சியை கடந்த 2021 ஆம் ஆண்டு கவிழ்த்தது இவர்களது அரசியல் பண்பாட்டை உலகிற்கே பறைசாற்றியது.

கடந்த 2018ல் மத்தியப் பிரதேச சட்டமன்றத் தேர்தலில் 114 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. பா.ஜ.க. 109 இடங்களில் வெற்றி பெற்றது. கூட்டணி கட்சிகளின் ஆதரவின் மூலம் 121 பேரின் ஆதரவைப் பெற்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. கமல்நாத் முதல்வரானார். அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே மன்னர் குடும்ப வாரிசான ஜோதிராய் சிந்தியாவின் ஆதரவோடு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 22 பேரை பா.ஜ.க. தங்கள் வசம் கொண்டு வந்தது. அவர்களை ராஜினாமா செய்யச் சொல்லி பின்பு தன் கட்சியில் இணைத்தது பா.ஜ.க. பெரும்பான்மை இழந்த காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது. பின்பு பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்தது.

கடந்த 2018ல் நடைபெற்ற கர்நாட சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 222 இடங்களில் 104 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. குதிரை பேரம் நடத்தியும், பண ஆசை காட்டியும், எவரையும் இழுக்க முடியாத காரணத்தால் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்பே பதவி விலகினார் எடியூரப்பா.

**78 தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியும், 37 தொகுதிகளில் வெற்றி பெற்ற மதச்சார்பற்ற ஜனதா தளமும் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்தனர். குமாரசாமி முதல்வராக பதவி ஏற்றார். ஆனால், ஒரு ஆண்டிலே காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் 13 பேரையும், ம.ஜ.த. சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேரையும் தன் பக்கம் கவர்ந்திழுத்தது. 16 சட்டமன்ற உறுப்பினர்களும் பதவியை ராஜினாமா செய்தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் பெரும்பான்மை இழந்த குமாரசாமி ஆட்சி கவிழ்ந்தது. பா.ஜ.க.வின் எடியூரப்பா புறவாசல் வழியே ஆட்சிக்கு வந்தார்.**

சிக்கிம் கதையோ வேறு விதமானது. கடந்த 2019ல் நடைபெற்ற சட்டமன்றத்தேர்தலில் மொத்தமுள்ள 32 தொகுதிகளில் 17ல் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சாவும், 15 இடங்களில் சிக்கிம் ஜனநாயக முன்னணியும் வெற்றி பெற்றது. ஒரு இடம் கூட வெற்றி பெறாத பா.ஜ.க. சிக்கிம் ஜனநாயக முன்னணியின் 10 எம்.எல்.ஏ.க்களை குதிரைபேரம் பேசி வளைத்து சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சாவுடன் இணைந்து ஆட்சி அமைத்தது. எஞ்சிய சிக்கிம் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த இரண்டு பேரும் சிக்கிம் கிராந்திகாரி கட்சியில் இணைந்தனர்.

மேகாலயாவில் கடந்த 2018ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் அங்கு மொத்தமுள்ள 60 தொகுதிகளில் 21ல் காங்கிரசும், 19ல் மக்கள் தேசிய கட்சியும் வென்றது. இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்ற பா.ஜ.க. தேசிய மக்கள் கட்சி, ஐக்கிய ஜனநாயக கட்சி உள்ளிட்ட சிறு கட்சிகளோடு கூட்டணி அமைத்து ஆட்சியைக் கைப்பற்றியது.

கடந்த 2015ஆம் ஆண்டு பீகார் சட்டமன்றத் தேர்தலில் லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளம் 80 இடங்களிலும், இதனோடு கூட்டணி அமைத்த ஐக்கிய ஜனதா தளம் நிதிஷ்குமார் 71 இடங்களிலும் வென்று கூட்டணி ஆட்சி அமைத்தனர். ஆனால், இரண்டே ஆண்டுகளில் 2017ல் கூட்டணியை உடைத்து பா.ஜ.க. ஆதரவோடு நிதிஷ்குமார் முதல்வராகவும், பா.ஜ .க.வின் சுஷில்குமார் துணை முதல்வராகவும் பொறுப்பேற்றனர். இப்படிச் செய்தவர்கள்தான் மகாராஷ்டிராவில் தன்னோடு கூட்டணி அமைத்த சிவசேனா துரோகம் இழைத்துவிட்டதாக கூச்சலிட்டனர்.

கடந்த 2017ஆம் ஆண்டு கோவாவில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 17ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. மீதமுள்ள 13ல் பா.ஜ.க. வென்றது. ஆனால், திடீரென்று காங்கிரஸ் கட்சியிலிருந்து 12 எம்.எல்.ஏ.க்களை தங்கள் வசம் இழுத்து அவர்களில் சிலருக்கு அமைச்சர் பதவியும் தந்து ஆட்சி அமைத்தது. அத்தோடு மாநில கட்சியான எம்.ஜி.பி. கட்சியின் மூன்று எம்.எல்.ஏ.க்களில் இரண்டு பேரை தங்களோடு இணைத்துக் கொண்டது. தற்போது 2022ல் 20 இடங்களில் வெற்றிருக்கும் சிறிய கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைந்திருக்கிறது.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற மணிப்பூர் சட்டமன்ற தேர்தலில் மொத்தமுள்ள 60 இடங்களில் 28 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. பா.ஜ.க. 21 இடங்களை வென்றது. காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நாகா மக்கள் முன்னணி, சுயேட்சைகளின் ஆதரவோடு பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தது. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஷ்யாம் குமார் சிங்கை தங்கள் பக்கம் இழுத்து பா.ஜ.க.வின் சார்பில் பிரேன் சிங்கை முதல்வராக்கினர். மேலும் 7 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் பா.ஜ.க.வில் ஐக்கியமாகினர்.

அதுபோலவே 2014ல் நடைபெற்ற அருணாச்சல பிரதேச சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 60 இடங்களில் 42 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது காங்கிரஸ். வெறும் 11 இடங்களைப் பெற்ற பா.ஜ.க. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த கலிகோ புல் தலைமையில் காங்கிரசை உடைத்து கலிபோ புல்லை முதல்வராக்கினர். இதை எதிர்த்து முன்னாள் முதல்வர் நபாம் உச்சநீதிமன்றம் சென்றார். இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் ஆளுநர் ராஜ்பவாரை கண்டித்ததுடன் ஆட்சிக் கவிழ்ப்பு செல்லாது என்றும் கடந்த 2015 டிசம்பர் 15ல் இருந்த நிலையே தொடர வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

அதைத் தொடர்ந்து 2016 ஜூலை 16ம் தேதி காங்கிரசின் நபாம் தூகி மீண்டும் முதல்வரானார். சில நாட்களில் அவர் பதவி விலக காங்கிரஸ் சார்பில் பீமா காண்டு முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மன வருத்தத்தில் இருந்த கலிகோ புல் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு அரசு இல்லத்திலேயே தற்கொலை செய்து கொண்டார்.

இந்த சிக்கலான சூழ்நிலையில் காங்கிரசின் புதிய முதல்வ ரான பீமா காண்டு 40 எம்.எல்.ஏ.க்களுடன் காங்கிரஸ் கட்சி யிலிருந்து விலகி அருணாச்சல் மக்கள் கட்சியில் சேர்ந்தார். பின்னர் பா.ஜ.க.வுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைத்த அவர் மீண்டும் அருணாச்சல் மக்கள் கட்சியிலிருந்து விலகி தனது ஆதரவு எம்.எல்.ஏ.க்களுடன் பா.ஜ.க.வில் இணைந்தார்.

மீண்டும் 2019ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அவரே வென்று தற்போது அருணாச்சல பிரதேச முதல்வராக தொடர்கிறார்.

இத்தனை சித்து வேலைகளையும் நடத்தி ஆட்சி அதிகாரத் திற்கு வருபவர்கள் ராமனின் ஒழுக்கம் குறித்து ஆட்சித் திறன் குறித்து ஆர்ப்பாட்டமாக பேசி வருகின்றனர். ராம ராஜ்யம் என்கிற முழக்கம் நடைமுறையில் பண ஆதிக்க ரவுடிகள் ஆதிக்கம் தான் என்பதை நிரூபித்துள்ளது.

குதிரைபேரத்தில் ஈடுபடுவது, ஒன்றிய அரசின் கவர்னர்கள், சிபிஐ, அமலாக்கப்பிரிவு, வருமானவரித்துறை போன்றவற்றை பயன்படுத்தியும் பதவி ஆசை காட்டியும், பணத்தை இறைத்தும், கட்சிகளை உடைத்து ஆட்சி அமைக்கும் கலையைத்தான் அமித்ஷாவின் சாணக்கியம் என்று ஊடகங்கள் பேசுகின்றன. இது சகுனி வேலை என்பதுதான் உண்மை.

தொடர்புக்கு: 94444 81703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 15

## நற்றமிழ் நாட்டில் நாகாக்க ஆளுநரே!

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ந்து சர்ச்சைக்குரிய கருத்துக்களையே பேசி வருவதன் மூலம் தனது அரசியல் சாசன கடமைகளை மீறி ஒருபக்கச் சார்போடு செயல்பட்டு வருகிறார்.

சில நாட்களுக்கு முன்பு சனாதன தர்மத்தால்தான் இந்தியா உருவாக்கப்பட்டதாக கூறியிருந்தார். ஆம் அது உண்மைதான்! சனாதனம் என்பது சதுர்வர்ண கோட்பாடு. சாதிக்கு ஒரு நீதி சொல்லும் சமூகச் சட்டங்களின் தொகுப்பு. மேலிருந்து கீழ்வரை கீழிலிருந்து மேல் வரை காழ்ப்புகள் விரவிக் கிடக்கிற சமூகம் என்பதுடன், இது அனைவரையும் பிரித்தாளும் நரித்தந்திரம். கல்வி உயர்சாதியினரின் உரிமையாக்கப்பட்டது. உழைப்போருக்கு ஒடுக்கப்பட்டோருக்கு அது மறுக்கப்பட்டது. எனவேதான் இந்தியா அடிமைப்பட்டது.

இந்த உண்மையெல்லாம் தெரிந்தும் காவல்துறையின் உயர் அதிகாரியாக இருந்ததாலோ என்னவோ, அவ்வப்போது ஆணைகளை அள்ளி வீசி வருகிறார். இதெல்லாம் தமிழ்நாட்டில் செல்லாது என்பதை அவர் அறிவாரா?

இந்த வகையில்தான் அவரது வழக்கமான தினசரி சர்ச்சைக்குரிய கருத்தில் திராவிடம் குறித்து ஒரு விவாதத்தைத் தொடங்கியுள்ளார். திராவிடர் என்ற சொல்லை ஆங்கிலேயர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியாக உருவாக்கியதாக திருவாய் மலர்ந்துள்ளார்.

மகாபாரதத்தில் திராவிடம் என்ற சொல் வருகிறது. திராவிட மொழிக் குடும்பத்தில் 85 மொழிகள் உள்ளன. கிரேக்கத்தில் தமிரிக்கா என்றும், ஒடிசா கல்வெட்டில் டிரமிட்டா என்றும் 1300 ஆண்டுகளுக்கு முன்பே வந்திருக்கிறது. குமிலபட்டர் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். பவுத்த நூலான லலிதா வசுத்திர திராவிட லிபி என்று அழைக்கிறது. சமய வங்கா எனும் சமண நூல் அக்காலத்தில் வழங்கிய 18 மொழிகளைப் பட்டியலிடுகிறது. அதில் சமஸ்கிருதம் இல்லை. ஆனால், தமிலில் ஒரு எழுத்து வடிவமாகக் குறிக்கப்படுகிறது.

திராவிடம் என்றால் கால்டுவெல்லையும் ஆங்கிலேயர்களையும் எப்போதும் வம்புக்கிழுக்கும் அவர்கள் அதற்கு முன்பே திராவிடம் என்றச் சொல் பயன்படுத்தி வந்த நிலையில் அதை ஏன் மறைக்க வேண்டும்?

சிங்களத்தில் தமிழைத் திராவிடம் என்றுதான் குறிப்பிடுகின்றனர். திருஞான சம்பத்தரை "திராவிட சிசு" என்று ஆதிசங்கரர் அழைத்தார். தென்கலை வைணவம் நாலாயிர திவ்ய பிரபந்தம் திராவிட வேதம் என்றும், நம்மாழ்வாரின் திருவாய்மொழி திராவிட உபநிசத் என்றும் அழைக்கப்படுகிறது.

சிவஞான முனிவரின் உரைகள் திராவிட மாபாடியம் என்று சைவர்களால் அழைக்கப்படுகிறது. கல்ஹானர் எழுதிய இராஜதரங்கிணி என்ற நூலில் பஞ்ச திராவிடர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஹரியானாவில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூட்டின் மரபணு தமிழகத்தின் இருளர் இனத்தோடு ஒத்துப் போகிறது.

வட இந்தியர்கள் ஐரோப்பியர்களோடு மரபணு ரீதியாக 40 முதல் 80 சதவீதம் வரை ஒத்திருக்கின்றனர். ஆனால், தொன்மையான தென்னிந்திய திராவிடர்களின் மரபணு உலகின் எந்த இன மக்களோடும் தொடர்பற்றதாக இருக்கிறது. இதன் மூலம் அவர்களே இந்தியாவின் மூத்த குடி என்பதும் நிரூபனமாகிறது.

திராவிட உறவுமுறை தனித்துவமானது. மாமான், மச்சான், திருமண உறவு போன்றவை வட மாநிலத்தவரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஏன், கட்டிடக் கலையில்கூட திராவிட கட்டிடக் கலைகள் நஹர கட்டிடக் கலையை விட வேறுபட்டது.

மராத்தி, ஒடியா இம்மொழிகள் அனைத்தும் திராவிட அடித்தளத்தில் உருவான மொழிகளே ஆகும்.

தமிழ்நாட்டில் எழுந்து சுழன்றடித்த பக்தி இயக்கத்தில் கூட சமஸ்கிருத எதிர்ப்பு விஞ்சி நின்றது. அயோத்திதாச பண்டிதர் தான் திராவிடம் என்ற சொல்லைச் சமூக அரசியல் தளத்தில் முதன் முதலில் பயன்படுத்தத் தொடங்கினார். 1891ல் திராவிட பாண்டியன் என்ற பத்திரிகையை நடத்தினார். இவ்வளவு சான்றுகள் இருக்க இவற்றையெல்லாம் ஒப்பு நோக்காது ஆளுநர் ஏன் வாய் திறக்க வேண்டும்?

இந்து என்று சொல் எந்த வேத உப நிஷத்துகளில் இருக்கிறது. ஈரானிய பார்சி மொழியிலிருந்து வந்தது. சர் வில்லியம் ஜோன்ஸ் உருவாக்கிய சொல்தான் இந்து என்பது. உண்மையில் இந்து, இந்தி, இந்தியா இந்த மூன்றும் ஆங்கிலேயரின் உருவாக்கம்.

ஆங்கிலேயர்கள் பிரித்தாண்டது உண்மைதான். ஏனெனில், ஏற்கனவே பிராமணியம் பிரித்தாண்ட சூழ்ச்சியை அவர்கள் அறிந்து தங்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை! நா காக்க ஆளுநரே!!

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

தலையங்கம்
(ஜூலை 3 - 9)

## இனவெறி சதித்திட்டம் மீண்டும் தீட்டப்படுகிறது




இவ்வளவு காலத்தில் ஜனநாயக இழப்பு என்ற அனுபவம் நமக்கு ஏற்பட்டதில்லைஞ் நாமும் நமது பன்மைத்துவத்தில் வாழ்ந்து வருகிறோம், எவரும் கலாச்சாரப் பண்பாட்டு எல்லைகளை மீறும்படி நம்மைக் கட்டாயப்படுத்தியதில்லை. 'பிறர்' என யாரையும் ஒதுக்கி ஒருபோதும் நாம் பிறரிடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்டதில்லை. உண்மையில் அது தனித்த அடையாளமாக எப்போதும் இருந்ததில்லை.

எனினும் இருபதாம் நூற்றாண்டின் மூன்றாவது பத்தாண்டில், 1925ல் ராஷ்ட்டிரிய சுயம்சேவக் சங் பிறந்தது. மேற்கில் கோபிநவ், ரோசன்பெர்க் மற்றும் சிலர் போல, பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, பிரிவினையை விதைக்க முயன்றனர்; மிகப் பரந்த அளவில் இனவெறிவாதக் கலாச்சார, தத்துவத்தையும் கொண்டுவர வழிவகைகளை காண முயன்றனர்; அவர்கள் 'ஆரியன்' கோட்பாட்டை நிறுவுவதில் மும்முரமாக ஈடுபட்டு, மனு ஸ்மிருதி எழுதக் களம் அமைத்து இனவெறி சதித்திட்டம் தீட்டும் பாரம்பரியத்தை அணையாது வைத்திருக்கின்றனர். ஆரியக் கோட்பாட்டைச் சுற்றி ஒரு பிரமையை ஏற்படுத்தி, தொடர்ந்து நழுவிச் சென்று, ஏதோ அது முழுமையாக மறைந்து போனதுபோலத் தோன்றினாலும் பின்னர் ஒரு கட்டத்தில் அதற்கே உரிய வகையில் உயிர்பெற்று வந்தது.

நமது பன்மைத்துவ மரபில் நாம் எதையெல்லாம் நமது செல்வங்களாகச் சாதித்தோமோ அவற்றை நிராகரித்து ஆர்எஸ்எஸ் ஒருபுறத்தில் ஒதுக்கித் தள்ளியது. அது இந்துத்துவா போர்வையில் இருக்கும் ஹிட்லரிசம். அது ஜீவித்திருப்பதன் ஒரே பயன், முழுமையான அதிகாரத்தைக் கைப்பற்றுவது; அதன் மூலம் இந்தியாவை, அரசியல், தத்துவம் மற்றும் வரலாற்று ரீதியில் முழுமையாக மறுகட்டமைப்புச் செய்வது ஒன்றே அதன் நோக்கம். அதற்காக அது பன்மைத்துவத்திற்கு எதிராக அடிப்படைவாதத்தைப் பற்றியிருக்கிறது. அந்த வெறியின் தீவிரம் எந்த அளவு செல்லும் என்பதற்கு ஒரு சோற்றுப் பதம் 2002ல் குஜராத்தில் நடத்த வகுப்புவாத வன்முறை. அந்த வன்முறை வெறியாட்டத்தில் சுமார் 2000 மக்கள், அவர்களில் பெரும்பான்மை இஸ்லாமியர்கள், கொல்லப்பட்டனர். அந்த வன்முறையாளர்கள் கொடூரங்களை அரங்கேற்றினர். அப்பாவிகளை உயிரோடு எரித்தனர். காலடிகளின் இடியோசை, இரத்தத்தை உறையச் செய்யும் கூச்சல்கள் பாதிக்கப்பட்டோர் மத்தியில் மரண அலைகளின் அச்சத்தை ஊட்ட, உயிரற்ற உடலாய் வீழ்ந்தனர்.

குற்றம் நடந்தால் வழக்கு வரும், தண்டனை வரும். ஆனால் மனிதகுலத்திற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இந்தக் குற்றங்களுக்கு, கொலைகளை விசாரித்த சிறப் புப் புலனாய்வுக் குழுவால் வழங்கப்பட்ட 'சுத்த சுயம்பிரகாசம் சீட்டு' வந்தது; அப்படி அளிக்கப்பட்ட குற்றமற்ற சான்று சீட்டையும் குஜராத் உயர்நீதி மன்றம் நியாயமே என அங்கீகரித்தது. இதே சடங்கு இந்த ஆண்டு 2022 ஜூன் 23 அன்று மீண்டும் நிகழ்த்தப்பட்டது; மசூதிகளில் ஜும்மா தொழுகைகள் நடந்த அந்த நாளில் உச்சநீதிமன்றமும் 'கிளீன் சிட்'டை உறுதிப்படுத்தியது.

முன்னாள் எம்பி இஷான் ஜாஃப்ரியின் மனைவி ஸைக்கியா ஜாஃப்ரி இவ்வளவு ஆண்டு காலமாகத் தனது கணவர் உள்ளிட்டோர் கொலைக்கு நியாயம் கோரி நீதிமன்றத்தில் தனது போராட்டத்தை நடத்தி வந்தார். அந்த மாபாதகக் கொலைகளை நடத்தியது மேலே விவரித்த வலதுசாரி சக்திகளைத் தவிர வேறல்ல. ஆனால் நியாயம் கோரிய ஸைக்கியா ஜாஃப்ரியின் அத்தனைப் புகார்களும் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறியப்பட்டன. நற்சான்று கிளீன் சிட்டின் ஒவ்வொரு வார்த்தையும் அவரது இதயத்தில் ஈட்டியாகச் சொருகுவதைப் போல உச்சநீதிமன்றம் கூறியது, "மனுதாரர் ஸைக்கியா ஜாஃப்ரி தாக்கல் செய்த, சட்டத்தின் ஆட்சி மீறப்பட்டது மற்றும் அதனை விசாரித்த விசாரணை குழுவின் இறுதி அறிக்கை மீதான மேஜிட்ரேட் மற்றும் உயர்நீதிமன்றத்தின் அணுகுமுறை முறையீட்டுடன் நாங்கள் உடன்படவில்லை"

உச்சநீதிமன்றம், ஸைக்கியா ஜாஃப்ரியின் மேல்முறையீட்டு மனு "தகுதிகளற்று" இருப்பதாகக் காணப்படுவதால் மனு நிராகரிக்கப்படுவதாகிறது என்றது. சிறப்புப் புலனாய்வுக் குழு ஏற்கனவே "விசாரிக்கப்படுவதற்குரிய தடய சாட்சியங்கள்" இல்லை என்றது. மேலும் நீதிமன்றம், இரண்டாவது மனுதாரர் தீஸ்தா சீதல்வாட் "தன்னல உள்நோக்கம்" கொண்டுள்ளார் எனவும், "பானையை அப்படியே கொதிக்கும்படி வைத்திருக்க" விரும்புகிறார் என்றும் கூறியது.

இந்திய உச்சநீதிமன்றம் நீதியை அடையச் செய்வதில் உறுதியாக நின்றபோது, இதுவரை நாம் சந்தித்த அனுபவம், அப்படியே தலைகீழானது. சில காலம் முன்பு இதே உச்சநீதி மன்றம் நிகழ்கால நடப்புக்களைக் கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது, அது ரோம் நகரம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல இருக்கிறது என்றது. அவையெல்லாம் ஒரு (கனாக்) காலம், அப்போது நீதிமன்றம் நடைமுறை நிகழ்முறைகளில் பாதைவிலகல் எதையும் அனுமதிக்காது, அதிகாரம் மிக்கவர்கள் தலையீடுகள் செய்தாலும் நிகழ்முறை நேராகத் தொடரும்படி உறுதி செய்தது. அது அதிகாரத்திற்குச் சரணடைய மறுத்தது, மேலே இருப்பவர்கள் தரும் அழுத்தங்களிலிருந்து பாதிக்காதவாறு ஏறத்தாழப் பெரும்பாலும் தற்காத்து தகைசான்ற நீதி பேணி நின்றது. இந்த உறுதிமொழிகளுடன் நீதிமன்றம் தன் வாயிலில் நீதி வேண்டி நிற்பவர்களை உறுதியாகப் பாதுகாக்க முயன்றது; அடாத குற்றச் செயல்களில் பலியானவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்கள் தங்களுக்கான நியாயமான இறுதி நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை அப்போது இருந்தது.

இவை அனைத்திற்கும் மாறாக, தீர்ப்பு வழங்கப்பட்ட மறுநாள் விருட்டென்று கைதுப் படலங்கள் அரங்கேறின, குஜராத் முன்னாள் டிஜிபி ஆர்.பி. ஸ்ரீகுமார் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர், தீஸ்தா செதல்வாட் கைது செய்யப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் கவலையளிப்பன. முந்தைய நாள் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் விரிவான மேற்கோள்கள் மற்றும் இணைப்பு ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜூன் 23 வெள்ளி அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், 2002 கலவரங்களில் அன்றைய முதலமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான குஜராத் அரசுக்குச் சிறப்புப் புலனாய்வுக் குழு வழங்கிய கிளீன் சிட்டைச் சரியென்று அங்கீகரித்தது; மேலும் குஜராத் அரசு மீது மாநில உயர் அதிகாரிகளால் பெருமளவிலான சூழ்ச்சி நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டை ஏற்பதற்கும் மறுத்தது. குற்றவாளிகளை விசாரணைக் கூண்டில் ஏற்ற மேற்கொண்ட முழுமையான முயற்சிகள் தோல்வியடைந்தன. இத்தோல்வி அதிர்ச்சி அளிப்பதாயினும் அறியாத ஒன்றல்ல. நாட்டின் நிகழ்வுகளை ஊன்றி கவனிக்கும் எவருக்கும் இந்த வழக்கின் போக்கு, குற்றச்சாட்டுகளை நிலைநாட்டி முடிந்திருந்தால் அதிஅற்புதம் என வியந்திருப்பார்கள், ஆனால் அப்படி எதுவும் நிகழவில்லை, நிகழவும் இங்கு வழியில்லை. இறுதியில் நீண்ட காலமாக நீதிக்காகக் காத்திருந்தவர்கள் தங்கள் துயர்களைத் தாங்களே நொந்து கொள்ளும்படி, உயிரோடு உலவுகையில் சிலுவைப் பாடுகளைச் சுமக்கும்படி, 'என் ஆண்டவரே, என் ஆண்டவரே எம்மை ஏன் கைவிட்டீர்' என்று அரற்றும்படி விடப்பட்டார்கள்.

அதே உத்தரவில் நீதிமன்றம் கவலைதரும் வகையில் மேலும் தொடர்ந்தது. அதன் தீர்ப்பு கூறியது, மறுநாள் தாக்கல் செய்யப்பட்ட ஃஎப்ஐஆர் அத்தீர்ப்பு வாசகங்களைப் பணிந்து மேற்கோளாகக் குறிப்பிட்டது: தீர்ப்பில், "அன்றைய நாளின் இறுதியில், குஜராத் அரசின் அதிருப்தியுற்ற அதிகாரிகள் மற்றவர்களுடன் கூட்டு சேர்ந்து ஒரு பரபரப்பை உண்டாக்க வேண்டும்ஞ் கொதிக்கும் பானை தொடர்ந்து கொதித்துக் கொண்டே வைத்திருக்க வேண்டும் என்று முயன்றதாக, அது இரகசியமான திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்ஞ் இவ்வாறு நிகழ்முறையைத் தவறாகப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் அனைவரையும் கூண்டில் ஏற்றி சட்டப்படியான நடவடிக்கையைத் தொடர வேண்டும்... என எங்களுக்குத் தோன்றுகிறது".

"அனைவருடனும், ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்காக" என்ற முழக்கம் எதார்த்தத்தில் எவ்வளவு தூரம் நம்மால் உண்மையில் சாதிக்க முடியும் என்பதை இனிதான் பார்க்க வேண்டும்.

தமிழில் : **நீலகண்டன்**



- இளசை கணேசன்

# குரங்கு கையில் பூமாலை



**அதிமுகவின் உச்சகட்ட உட்கட்சி சண்டை ஊடகங்களை ஆக்கிரமித்துள்ளது. இது அண்ணாமலையின் அதிரடி அறிக்கைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டது.**

11.7.202 ல் இரண்டு ஃபிளாஷ் நியூஸ்!

**ஒன்று:**

- எடப்பாடி பழனிச்சாமி இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு.
- கழக உறுப்பினர்களுக்கான உறுப்பினர் சீட்டு புதுப்பிக்கப்பட்டு புதிய உரிமைச் சீட்டு வழங்கப்படும்.
- நான்கு மாதத்திற்குள் தொண்டர்களால் பொதுச் செயலாளர் தேர்வு செய்யப்படுவார்.
- நத்தம் விசுவநாதன், பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் தேர்தல் பொறுப்பாளர்களாக செயல்படுவர்.
- கே.பி. முனுசாமி துணைப் பொதுச் செயலாளராக தேர்வு.
- திண்டுக்கல் சீனிவாசன் கழகப் பொருளாளராக தேர்வு.
- 16 தீர்மானங்கள் நிறைவேற்றம்.
- அதிமுக விதிகளில் திருத்தம்.
- ஓபிஎஸ், வைத்தியலிங்கம், மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி. பிரபாகரன் ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கம்.

இவை வானகரத்தில் நடைபெற்ற பொதுக்குழுவில் எடுக்கப்பட்டவை.

**இரண்டு:**

- தற்காப்பை தகர்த்து தலைமை அலுவலகத்தை ஓபிஎஸ் கைப்பற்றினார்.
- அதிமுகவின் முக்கிய ஆவணங்களை ஓபிஎஸ் எடுத்துச் சென்றுவிட்டார்.
- அதிமுக தலைமை அலுவலகத்திற்கு சீல் வைப்பு!
- எடப்பாடி பழனிச்சாமி, கே.பி. முனுசாமி ஆகியோர் கட்சியை விட்டு நீக்கம்.
- பொதுக்குழு நடத்தியதும், பொதுக்குழு முடிவுகளும் கட்சி விதிப்படி செல்லாது என்ற அறிவிப்பு.

இவை அவ்வை சண்முகம் சாலையிலும், ஓபிஎஸ் வீட்டிலும் நடந்தவை.

'தர்மயுத்தம்' வேலைக்காகாது என்பதால் ஓபிஎஸ் 'தடியடி யுத்தம்' நடத்தியிருக்கிறார் போலும்..

இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி தொடர்வாரா?

ஒன்றரை கோடி தொண்டர்களால் எடப்பாடி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு உள்ளதா?

ஓபிஎஸ் நினைப்பது போன்று மீண்டும் இரட்டை தலைமைக்கு வாய்ப்பு உள்ளதா?

இதுபோன்ற கேள்விகளுக்கு எடப்பாடி பழனிச்சாமி – ஓ.பி.எஸ். ஆகிய இருவரிடமும் பதில்கள் இல்லை !

ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளை எடப்பாடியாலும் தீர்க்கமுடியாது பன்னீர்செல்வத்தாலும் தீர்க்க முடியாது.

- ஒன்றிய பாஜக அரசு
- நீதிமன்றங்கள்,
- காவல்துறை,
- வருவாய்த்துறை

ஆகியவற்றின் அதிகாரங்களுக்குள் சென்றுவிட்டது. ''ஆப்பரேஷன் சக்சஸ் பேஷண்ட் கோமாவில்'' என்று ஆகிவிட்டது"

அதிமுகவில் நடப்பது என்ன? எப்படிப் புரிந்து கொள்வது?

1. உட்கட்சிக்கான சுயநல அதிகாரப் போட்டி.
2. அதிமுகவின் அரசியலும், அமைப்பு நிலையும் பாஜகவுக்கு தாரை வார்ப்பு.
3. குவித்த பணத்தில் கும்மாளம் போடுதல்.
4. தொண்டர்கள் பற்றி துளியும் கவலை இல்லாத போக்கு.

என்ற ரீதியில் புரிந்து கொள்ள வேண்டும்.

உட்கட்சி அதிகாரத்திற்கான போட்டியில் பல முனைப் போட்டிகள் இருந்தாலும் இப்போது தெரிவது மும்முனைப் போட்டி தான்.

1. இ.பி.எஸ். – எடப்பாடி பழனிச்சாமி – ஒற்றை தலைமை.
2. ஓ.பி.எஸ். – ஓ.பன்னீர்செல்வம் – இரட்டை தலைமை
3. வி.கே.எஸ். –வி.கே.சசிகலா –நான்தான் பொதுச்செயலாளர்.

இந்த மும்முனை போட்டி தொண்டர்களின் விருப்பம் அல்ல. அதிகாரத்திற்கான தலைவர்களின் சுயநல திணிப்பு.

- இரட்டை இலை சின்னம் முடக்கம்!
- கட்சித் தலைமைக்கான போட்டி!
- தலைமைக்கழகம் பூட்டி சீல் வைக்கப்படுதல்.

இவை இதற்கு முன்பும் நடந்திருக்கிறது. ஆனால் அப்போது வி.என்.ஜானகி தலைமையிலும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலும் அதிமுக ஆட்சியில் இருந்தது.

ஆனால்...

- இப்போதோ அதிமுக ஆட்சியிலும் இல்லை! தொடர்ச்சியான தொடர் தோல்வி!
- ஒன்றரை கோடி தொண்டர்களும் நெஞ்சை உயர்த்தி அரசியல் பணியாற்ற முடியாமல் துவண்டு கிடக்கிறார்கள்!
- ஆளுங்கட்சியை எதிர்த்து எதிர்க்கட்சியாக கூட எடப்பாடி தலைமை செயல்பட முடியவில்லை..
- முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில்: வரிசையாக, தொடர்ச்சியாக ரைடு!

இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் உட் கட்சித்தலைமைக்கான போட்டி தேவையா?

தலைவர்களின் சுயநலத்தால் அதிமுக தொடங்கி 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒன்றுபட்டு பொன்விழா கொண்டாட வேண்டிய நேரத்தில், கட்சியை பலவீனப்படுத்தி பிளவு படுத்தலாமா?

தொண்டர்கள் என்ற போர்வையில் குண்டர்களை மோத விடுவதா?

இதுவே அதிமுக தொண்டர்களின் கேள்வி! தமிழக வாக்காளர்களின் கேள்வி!

**இபிஎஸ், ஓபிஎஸ், வி கே எஸ் மூவரும் சேர்ந்து அதிமுகவின் அரசியலையும், அமைப்பு நிலையையும் பாஜகவின் காலடியில் கிடத்தி விட்டு, வீழ்ந்து கிடக்கிறார்கள். இதுவரையில் எழுந்திருக்கவில்லை. உட்கட்சி அதிகாரத்தில் ஒருவருக்கொருவர் காலை வாரி கொள்கிறார்கள்.**

''கிடைத்த அப்பத்தை பங்கிடும் சண்டையில் குரங்கிடம் கொடுத்து ஏமாந்த கதையாக''

எடப்பாடியும், பன்னீர்செல்வமும் கட்சியின் அரசியலையும், அதிகாரத்தையும் பாஜகவிடம் கொடுத்து ஏமாந்து விட்டார்கள்!

அரசியல் கட்சியின் அடிப்படை என்பது அரசியல் நிலைப்பாடு ஆகும்.

தமிழ்நாட்டில் அதிமுக என்ன அரசியல் நிலை எடுக்கிறது என்பதுதான் தொண்டர்களின் விருப்பமும் வாக்காளர்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

- இந்திய ஒன்றியத்தில் யார் ஆள வேண்டும்? எந்தக் கொள்கை ஆளவேண்டும்?
- இந்திய ஒன்றியத்தில் யார் ஆளக்கூடாது? எந்தக் கொள்கை ஆளக்கூடாது?
- தமிழ்நாட்டில் யார் ஆள வேண்டும்? யார் ஆளக்கூடாது?
- தமிழ்நாட்டில் எந்தக் கொள்கை ஆளவேண்டும்? எந்தக் கொள்கை ஆளக்கூடாது?

என்று நிலை எடுப்பதுதான் அரசியல் நிலை!

ஆரிய, ஆர் எஸ் எஸ், பாசிச பாஜகவை ஆதரிக்கும் அரசியல் நிலையை அதிமுக எடுத்துள்ளது.

- இந்திய ஒன்றியத்தை ஆர். எஸ். எஸ்.சின் வகுப்பு வெறிக் கொள்கை ஆள வேண்டுமென்று நிலை எடுக்கிறது,
- திராவிடக் கொள்கைகளை, தமிழர் நலன்களை, தமிழ்நாட்டு உரிமைகளை ஒன்றிய பாஜகவின் காலடியில் கிடத்தும் அரசியல் நிலைபாட்டை அதிமுக எடுக்கிறது.

அதிமுகவின் இத்தகைய அரசியல் நிலைபாட்டை அதிமுகவின் ஒன்றரை கோடி தொண்டர்கள் ஏற்கிறார்களா?

தமிழக வாக்காளர்கள் ஏற்கிறார்களா?

ஏற்கவில்லை என்பதை தேர்தல் மூலம் காட்டி விட்டார்கள்.

- நாடாளுமன்றத் தேர்தல்
- சட்டமன்றத் தேர்தல்.
- ஊரக உள்ளாட்சி தேர்தல்
- நகர்புற உள்ளாட்சித் தேர்தல்.

போன்ற அனைத்திலும் அதிமுக தோல்வி! தொடர்ச்சியாக தோல்வி!

தோல்வியிலிருந்து அதிமுக தலைமை கற்றுக்கொண்ட பாடம் தான் என்ன?

இதுவே அதிமுகவின் ஒன்றரை கோடி தொண்டர்களின் கேள்வி"

"பெருவாரியான மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறவில்லை என்றால் சுரண்டி ஏமாற்றி குவித்த மூலதனம் அரசியலிலே எக்காளம் போடும்.''

கார்ப்பரேட் உலகமய அரசியலில் "தேர்தல் சந்தையாகவும், வாக்குகள் சரக்குகளாகவும் ஆக்கப்படும்.''

இது நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களுக்கு மட்டுமன்றி உட்கட்சித் தேர்தலுக்கும் பொருந்தும்.

அதிமுகவின் உள்கட்சி போட்டியில் அதிமுக ஆட்சியில் இருந்தபோது அள்ளிச் சுருட்டப்பட்ட சொத்து குவியல் ஆட்டம் காட்டியிருக்கிறது.

"அதிகாரத்தில் இருந்தபோது குவித்த பணத்தில் ஆட்டம் போடுகிறார்கள் கும்மாளம் போடுகிறார்கள்''

எடப்பாடியிடம் எத்தனை எம்எல்ஏக்கள் இருக்கிறார்கள் ?

முன்னாள் அமைச்சர்கள் யார் யார் எடப்பாடியை மிரட்டுகின்றனர்?

எடப்பாடியின் இன்றைய ஆதரவு நிலைக்காது என்று அதிமுகவின் முக்கியத் தலைவரான பொன்னையன் போட்டு உடைக்கிறார். இதற்கான ஆடியோ வைரலாகிறது.

''பிரதமர் மோடி சொன்னதால் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றேன்'' என்று மோடியின் தலையீட்டை ஓபிஎஸ் போட்டு உடைக்கிறார்.

கடுமையாக வன்முறை மூலம் மோதிக் கொள்ளும் எடப்பாடியும் பழனிச்சாமியும் ஜனாதிபதி தேர்தலில் பாஜகவின் வேட்பாளரை ஆதரிக்கிறார்கள்.

எடப்பாடியும் பழனிச்சாமியும் எம்ஜிஆர் ஆகவோ ஜெயலலிதா ஆகவோ ஆக முடியாது

வாக்காளர்களை கவர்ந்து இழுக்கும் ஆற்றல் தொண்டர்களை சுண்டி இழுக்கும் ஆற்றல் இருவருக்கும் கிடையாது..

பொதுக்குழு திருப்தியில் எடப்பாடி!

தலைமைக்கழகம் சீல் வைத்த திருப்தியில் பன்னீர்!

ஒன்றரைகோடி தொண்டர்கள் பற்றி கவலை எங்கே?

தொடர்புக்கு: **82204 68816**



- கே.கதிரவன்

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இரட்டை தாழ்ப்பாள்

# ஒரே நேரத்தில் இரட்டைப் பட்டம்!



**உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு பட்டப் படிப்புகளைப் (Dual Degree) கற்கலாம் என பல்கலைக்கழக மானியக்குழு மே மாதம் அறிவித்துள்ளது. இதன்படி உயர்கல்வியில் தாங்கள் விரும்புகின்ற இரண்டு வெவ்வேறு விதமான பட்டப் படிப்புகளை தேர்வு செய்து பட்டப் படிப்புகளைப் பெறலாம்.**

உதாரணமாக அறிவியல் பட்டப் படிப்பை படிக்கும் மாணவர்கள் சமூக அறிவியல் பாடத்தையும், வணிகவியல் பாடத்தையும் ஒரே நேரத்தில் படித்து பட்டங்களை பெறலாம். அதுபோல் ஒரு பட்டப்படிப்பை முழு நேர வகுப்பாக வகுப்பிலும், மற்றொரு பட்டப்படிப்பை இணைய வழி மூலமாக படித்து இரண்டு பட்டங்களை பெற இயலும். இதனால் மாணவர்கள் கற்றல் திறன் அதிகரிக்கும் என தேசிய கல்வி கொள்கை உருவாக்கியவர்கள் கருதுகின்றனர். இது போன்ற கல்வி பட்டப்படிப்புகள் யாருக்கானது, இதன் வழியாக கிராமப்புற, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எந்தவிதமான பயன் ஏற்படப் போகின்றது?

கிராமப்புற ஒடுக்கப்பட்ட மாணவர்கள் தங்களின் உயர் கல்வியை பெரும்பாலும் அரசு கல்லூரிகளை சார்ந்ததே. உயர் கல்வியில் ஒரு மாணவர் தன்னுடைய மூன்று வருட பட்டப் படிப்பை பெறுவதற்கு ரூபாய் 10 ஆயிரத்திற்குள்தான் கல்வி கட்டணமாக செலவிடுகின்றனர், அதிலும் SC/ST, MBC,BC வகுப்பினர் கல்வி உதவித்தொகை மூலமாகவும் பயனடைகின்றனர். ஆனால் இந்த குறைந்தபட்ச கட்டணத்தை கூட செலுத்த முடியாமல் சில மாணவர்கள் கல்வியை விட்டு விலகி தங்களின் குடும்ப வருமானத்தை ஈட்டுவதற்காக பகுதி நேரத்திலோ அல்லது முழுவதுமாகவோ வேலைக்கு செல்வதற்கு தள்ளப்படுகின்றனர், இது போன்ற சூழ்நிலையில் பல்கலைக்கழக மானியக் குழு கூடுதலாக மற்றொரு பாடத்தையும் படிக்கலாம். ஒரு பட்டப் படிப்பை படிப்பதற்கே கல்விக்கட்டணம் செலுத்த இயலாத மாணவர்களை நோக்கி பல்கலைக்கழக மானியக் குழு மற்றொரு பட்டப்படிப்பை அளிக்கிறோம் என்பது ஏழை மாணவர்களுக்கான திட்டமாக தெரியவில்லை. கல்லூரிகளில் நேரடியாக வகுப்பறையில் அமர்ந்து கற்கும் போதே சிலர் தேர்வுகளில் தோல்வி அடைகின்றனர், இதற்கு குடும்ப சூழ்நிலை மற்றும் அந்த சுற்றுப்புற சூழ்நிலையின் காரணமாகவும் தேர்வில் தோல்வி அடைகின்றனர். ஆகையால் இதுபோன்ற சூழ்நிலையில் தினம்தோறும் வகுப்பில் அமர்ந்து கற்கும் மாணவர்களே தேர்வில் தோல்வி அடையும் பொழுது இந்த இரட்டைப் பட்டப் படிப்பில் மாணவர்கள் சேர்ந்து பலன் அடைய முடியும் என்பது சந்தேகத்துக்கு உரியது ஆகும்.

தற்போது மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள இந்த இரட்டைப் பட்டப் படிப்புகளை படிப்பதனால் எவ்விதமாக மக்களுக்கு இது பயன்படப் போகிறது? ஒன்றிய அரசு மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காக கல்வி திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்தால் முதலில் கலை கல்லூரிகளில் இவ்வித திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பதிலாக தொழிற்கல்வியில் மாற்றங்களைச் செய்தாலே போதும் எதிர்காலத்தில் மாணவர்களின் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும். தமிழகத்தில் சில குறிப்பிட்ட மாணவர்கள் தொழிற்கல்வி சார்ந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் படித்து வருகின்றனர். அரசு வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டுமென்றால் பாலிடெக்னிக் கல்லூரிகளில் இரண்டு பட்டப்படிப்புகளை கொண்டு வரலாம் அல்லது அதற்கேற்ற திட்டங்களை வகுக்கலாம், ஏனென்றால் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேருகின்ற மாணவர்களின் நோக்கமானது தொழில் துறையில் வேலை வாய்ப்பை பெற வேண்டும் அல்லது தொழில்துறையை நிர்வகிக்க வேண்டும். அதைவிடுத்து அரசு கலை கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இரண்டு விதமான பட்டப்படிப்புகளை அளிப்பதால் அவர்களுக்கு எந்த பட்டப் படிப்பிலும் முழுமையாக கற்க இயலாது.தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளில் பொறியியல் கல்லூரிகள் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது,தற்போது தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட கல்லூரிகளில் கிட்டத்தட்ட 2.30 லட்சம் பொறியியல் இடங்கள் உள்ளன. கடந்த சில வருடங்களாக பொறியியல் இடங்களில் மாணவர் சேர்க்கை குறைவாக உள்ளது ஏனென்றால் பொறி யியல் படித்து வெளிவரும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு குறைவாக உள்ளது மற்றும் கிடைக்கின்ற வேலைக்கும் ஊதியம் குறைவாக கிடைக்கின்றது ஆகையால் பெரும்பாலான பொறி யியல் இடங்கள் காலியாகவே உள்ளன. ஆகையால் தேசிய கல்வி கொள்கை தொழில்நுட்ப கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்களை உருவாக்கி தொழில் சார்ந்த படிப்புகளை உருவாக்க வேண்டும், அதுபோல் தொழில்நுட்ப மாணவர்களின் வாழ்வின் முன்னேற்றத்தை காண்பதற்கு இதுபோன்ற இரட்டைப் பட்டப் படிப்புகளை உருவாக்க வேண்டுமே தவிர தொழில்நுட்ப படிப்புகள் மீது விருப்பமில்லாமல் கலைக் கல்லூரிகள் மீது ஈர்க்கப்பட்டு படிக்கின்ற மாணவர்களிடம் இந்த இரட்டைபடிப்பை அறிமுகம் செய்தால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்றால் தொழிற்கல்வி சார்ந்த சில சான்றிதழ் படிப்புகளை மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம், அதை விடுத்து

**சம்பந்தம் இல்லாத மற்றொரு பாடத்திட்டத்தினை மாணவர்களை படிக்க சொல்வதன் மூலம் சுமை தான் அதிகரிக்கும். அதற்கு பதிலாக இப்பாடங்களை அளிக்க போகின்ற கல்வி நிறுவனங்கள் தங்களின் வளத்தை பெருக்கிக் கொள்வதற்காக அமையுமே தவிர மற்றபடி மாணவர்களின் எதிர்காலத்தினை மேம்படுத்துவதற்கு அல்ல.**

தமிழகத்தில் காலை நேர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தங்களின் படிப்பு நேரம் முடிந்த பிறகு நண்பகலுக்கு மேலும் பகல் நேர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் காலை நேரத்திலும் அவர்கள் தங்களின் குடும்ப வருமானத்திற்காகவும் மற்றும் கல்வி கட்டணத்திற்காகவும், பொருள் ஈட்டக்கூடிய சூழலில் அவர்கள் பகுதிநேர வேலைக்கு சென்று வருகின்றனர். கல்வி கற்பதற்கே வேலைக்கு செல்ல கூடிய சூழ்நிலையில் உள்ள மாணவர்களுக்கு மற்றுமொரு பட்டப்படிப்பை படிப்பதற்கான அவசியம் ஏற்படாது. ஒரு பட்டப் படிப்பை இணையவழி மூலமாக கற்க வேண்டும் என்று அறிவுறுத்துவதுதன் மூலம் இணையவழிக்கு தேவையான இணையம், கணினி போன்றவற்றை வாங்குவதற்கு கிராமப்புற மாணவர்களுக்கு பொருளாதார வசதி இல்லாததால் இதுபோன்ற இரட்டை பட்ட படிப்புகள் இம்மாணவர்களுக்கு எந்த விதத்திலும் உதவாது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

இந்தியாவில் பெரும்பாலான கிராமப்புற மற்றும் ஒடுக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு அறை வீடுகளிலே அதாவது 200 சதுர அடி உள்ள வீட்டில் வசித்து வருகின்றனர், குறிப்பாக சென்னை கண்ணகி நகர், செம்மஞ்சேரி மற்றும் மற்ற இடங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் வசிப்பது மிகக் குறைந்த சதுர அடி அளவிலான இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.இங்கு இருக்கும் மாணவர்கள் படிப்பதற்கு என்று எந்தவித தனியான அறைகளும் கிடையாது, இவர்கள் உண்டு உறங்குவதற்கும் படிப்பதற்கும் ஒரே அறையிலேயே இவர்கள் வாழ்ந்து கொண்டு உள்ளனர்.

இதுபோன்ற சூழ்நிலையில் மாணவர்களின் முன்னேற்றத்தை அடைவதற்க்கு அவர்கள் இருக்கின்ற சூழ்நிலையை மாற்ற வேண்டுமே தவிர இரட்டை பட்டப் படிப்புகளை அளிப்பதால் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை. தேசிய கல்வி கொள்கை மூலம் உயர்கல்வியை அனைவருக்கும் அளிக்கின்றோம் என்பது குறிப்பாக ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களுக்கான கல்வி அல்லாமல் இது மேட்டுக்குடி மக்களை மேன்மேலும், மேட்டு குடி மக்களாக உயர்த்துவதற்கும் மற்றும் கீழ்த்தட்டு மக்களை கீழ் தட்டிலும் வைப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் இக்கல்வி உதவுகின்றது.

தமிழகத்தில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 9.30 லட்சம் மாணவர்கள் தங்களின் பள்ளிக் கல்வியை முடித்து பட்டப்படிப்பை நோக்கி வருகின்றனர். இந்த மாணவர்கள் பட்டப்படிப்பை முடித்து வெளிவருகின்ற பொழுது வேலைவாய்ப்பு நம்மால் உருவாக்க முடிந்ததா என்றால் அதுவும் கேள்விக்குறியாகும். வேலை வாய்ப்பை பெறுவதற்காகவா அல்லது வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவா கல்வியை கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்ற அய்யம் தற்போது எழுந்துள்ளது. ஏனென்றால் கடந்த பத்து வருடங்களில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படித்த பெரும்பாலான மாணவர்கள் தினக் கூலிகளாக சென்னையை சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைகளில் இரவு பகலாக வேலை பார்த்துக் கொண்டு பேருந்துகளில் பயணம் செய்வது நம் கண்முன்னே தெரிகின்றது. இவர்கள் பல்கலைக்கழகங்களில் கற்றறிந்த பாடங்கள் அனைத்துமே இவர்களை ஒரு தினக்கூலியாக உருவாக்கியுள்ளது அப்படி என்றால் இவர்கள் படித்த படிப்பு இவர்களை ஏன் அறிவு தளத்தில் மேம்படுத்தவில்லை? இரட்டை பட்டப்படிப்புகள் அளிப்பதால் இதில் யார் பலனடைய போகின்றார்கள? ஒற்றை பட்டப்படிப்பை படிக்க முடியாத ஒடுக்கப்பட்ட மற்றும் கிராமப்புற மாணவர்கள் இதை நுகர முடியாது. கம்யூனிச சித்தாந்தத்தின் படி இது வர்க்க பேதத்தை உருவாகின்றது அல்லது ஏழை – பணக்காரர் இடைவெளியை மேன்மேலும் நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாக தோன்றுகிறது. வர்ணாசிரமத்தின் அடிப்படையில் மேல்தட்டு மக்கள் மேல்தட்டு மக்கள் ஆகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒதுக்கப்பட்ட மக்களாகவும் இருப்பதற்காக இதுபோன்ற கல்வித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளதா? என்ற சந்தேகமும் நம்முன் எழுகின்றது. இதன் தொடர்ச்சியாக மாணவர்கள் தங்களின் வேலைவாய்ப்பிற்காக அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களை அணுகும் போது இரண்டு பட்டப்படிப்புகளை வைத்திருக்கின்ற மாணவர்களுக்கும் ஒரு பட்டத்தை படித்திருக்கின்ற மாணவர்களுக்கும் இடையே சம போட்டி நடைபெற வாய்ப்பு இல்லை, ஆகையால் இது ஒடுக்கப்பட்ட மக்களை மேன்மேலும் ஒடுக்குவதற்கான சாதனமே அன்றி வேறல்ல !

இரட்டை பட்டப் படிப்புகளுக்கான கல்வி கட்டணத்தை இதுவரை பல்கலைக்கழக மானியக்குழு அறிவிக்கவில்லை, தற்பொழுது பெரும்பாலான அரசு உதவி பெறும் கல்லூரிகள் அரசு கட்டணத்திற்கு மேல் 10 மடங்கிற்கு அதிகமாக வசூலித்து வருகின்றன. கல்விக் கட்டணமும் அந்தந்த கல்லூரிகள் தங்களின் நட்சத்திர அந்தஸ்திற்கு ஏற்ப நிர்ணயித்துக் கொள்கின்றனர். இதனால் கிராமப்புற ஒடுக்கப்பட்ட மாணவர்கள் பகல்நேர கல்லூரிகளில் வாய்ப்பு மறுக்கப்படுகின்றன அல்லது மாணவர்கள் அதில் பயில்வதற்கு விருப்பம் தெரிவிப்பதில்லை. தற்போது அறிவித்துள்ள இந்த இரட்டைப் பட்டப் படிப்புகளுக்கும் கல்வி கட்டணத்தை நிர்ணயிக்க சொல்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை,இதன் விளைவாக அந்தந்த அரசு உதவி பெறும் கல்லூரிகள் கல்விக் கட்டணத்தை நாங்களே நிர்ணயம் செய்து கொள்வதன் மூலமாக வசதி படைத்தோர் கல்வியை கற்கும் சூழ்நிலை ஏற்பட்டு கல்வி என்பது ஒரு சந்தைப் பொருளாக மாறுவதற்கு வாய்ப்புண்டு, அதேபோல் ஒடுக்கப்பட்ட கிராமப்புற மாணவர்கள் கல்வியில் இருந்து அப்புறப்படுத்த படுவார்கள். அதிலும் குறிப்பாக நன் மதிப்பை பெற்ற நகரத்தில் உள்ள கல்லூரிகள் தங்களின் நட்சத்திரத்தை அந்தஸ்தை தக்க வைத்துக் கொண்டு மேன்மேலும் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற அரசு கலைக் கல்லூரிகள் நாளுக்கு நாள் பின் பின்தங்கி மூடுவிழா காண்பதற்கான சூழ்நிலை ஏற்படும்.

தொடர்புக்கு: 86673 38638

நூறு நாள் வேலை வழங்காததைக் கண்டித்து

## கிராம மக்கள் போராட்டம்

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஞாயிறு ஊராட்சி, கண்ணியம்பாளையம், பகவன்பாளையம், தாண்டவராயன் பாளையம் போன்ற கிராம மக்களுக்கு நான்கு மாத காலமாக தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் நூறு நாட்கள் வேலை வழங்கப்படவில்லை. இதனை கண்டித்து கண்ணியம்பாளையம் கிராம நிர்வாக அலுவலகம் முற்றுகைப் போராட்டம், ஞாயிறு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கே.ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்றது.

போராட்டத்தை தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் துவங்கி வைத்தார். இதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கே.சதீஷ்குமார், மனோன்மணி சாரங்கன், அருணா சேஷாத்திரி, உமா லோகேஷ் மற்றும் ஜி.ஆனந்தராஜ், ஆர்.வேணுகோபால் உள்ளிட்ட




ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

போராட்டக்காரர்களுடன் சோழவரம் வட்டார வளர்ச்சி அதிகாரி பேச்சுவார்த்தை நடத்தினர். கோரிக்கைகள் ஏற்கப்பட்டதால் போராட்டம் கைவிடப்பட்டது.



# சங்கே முழங்கு!



## இடதுசாரிப் பாதையில் சிலி

**- ஆனந்த் பாசு**

கடந்த 2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், லத்தீன் அமெரிக்க நாடான சிலியில், 78 சதவீதம் பேர், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தனர். அதன் பிறகு, இதை நடைமுறைப்படுத்த, மிகப்பெரிய எழுச்சி மிகு போராட்டங்களை சிலி நாட்டு மக்கள் முன்னெடுத்தனர். பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடினர். இவ்வாண்டு மார்ச் முதல் பதவியில் இருக்கும் இடதுசாரியான ஜனாதிபதி கேப்ரியல் போரிக், இந்த போராட்டங்களின் முக்கிய முகமாக இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அந்த நாட்டின் சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி மற்றும் ஓய்வூதிய முறையை சீர்திருத்த முனைகிறது இந்தப் புதிய அரசியல் அமைப்பு சட்ட வரைவு.

உலக வங்கியின் கூற்றுப்படி, சமீபத்திய தசாப்தங்களில் லத்தீன் அமெரிக்காவின் வேகமாக வளரும் பொருளாதாரமாக சிலி உள்ளது. இருப்பினும், சிலி நாட்டில் 30 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். மேலும், அங்கு வருமான சமத்துவமின்மை அதிகமாக உள்ளது. 2019 ஆம் ஆண்டில் அந்நாட்டில் வெடித்த போராட்டங்கள், இந்த சமத்துவமின்மையை நிவர்த்தி செய்ய பல்வேறு சீர்திருத்தங்களைக் கோரியது.

சிலி நாட்டின் தற்போதைய அரசியலமைப்பு சட்டம் மேனாள் இராணுவ சர்வாதிகாரி அகஸ்டோ பினோசே ஆட்சியின் போது உருவாக்கப்பட்டது. அதற்குப் பின், 2005 ஆம் ஆண்டில், ரிக்கார்டோ லாகோஸ் ஜனாதிபதியாக இருந்தபோது, அரசியலமைப்பு சட்டத்தில், ஜனாதிபதி பதவிக் காலத்தை ஆறிலிருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைத்தல் மற்றும் ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகாரங்களைக் குறைத்தல் ஆகியவை உள்ளிட்ட சில திருத்தங்கள் செய்யப்பட்டன. பிறகு, அதற்குப் பதிலாக புதிய சாசனம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில், தற்போதைய ஜனாதிபதி கேப்ரியல் போரிக், முனைப்புடன் செயல்படுகிறார். தற்போது புதிய வரைவு தாக்கல் செய்யப்பட்டுள்ள சூழலில், வரும் செப்டம்பர் மாதத்தில், இதை நடைமுறைப் படுத்துவது குறித்து சிலி மக்கள் முடிவெடுப்பார்கள். சிலி நாடு இடது சாரி, சமூக ஜனநாயக திசை வழியில், அதிக சமத்துவத்துடன், முன்னேற வேண்டும் என்றால் இந்த புதிய அரசியல் அமைப்பு சட்டம் தவிர்க்க முடியாதது.




### முற்போக்குப் பேரவை சார்பில்

## “உக்ரைன் போரும் உலக சமாதானமும்” கருத்தரங்கம்

அனைத்திந்திய முற்போக்குப் பேரவை சார்பில் “உக்ரைன் போரும் உலக சமாதானமும்“ என்ற கருத்தரங்கம் சென்னை, எம்.கே.அரங்கில் நடைபெற்றது. ஜூலை 10 அன்று நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு எழுத்தாளர் எஸ்.எஸ். இளசை கணேசன் தலைமை தாங்கினார். மருத்துவர் ஜி.ரமேஷ், முனைவர் ஜி.சத்தியபாலன் முன்னிலை வகித்தனர். சிறுநீரக மருத்துவ நிபுணர் என்.வெங்கடேஷ் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் த.அறம் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். ஏ.ஐ.பி.எஃப். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி வாழ்த்துரை வழங்கினார். ஏ.ஐ.பி.எஃப் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் சிறப்புரையாற்றினார். மூத்த தொழிற்சங்கத் தலைவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி நிறைவுரையாற்றினார். பி.காளிதாசன் நன்றி நவின்றார்.

கருத்தரங்கை தொடர்ந்து நடைபெற்ற மாநிலக் குழுவில் மாநிலத் தலைவராக டாக்டர் என்.வெங்கடேஷ், துணைத்தலைவர் களாக பி.காளிதாசன், ஆர்.கிருஷ்ண மூர்த்தி தேர்வு செய்யப்பட்டனர்.

### பயிற்சி மருத்துவ இடங்களை அதிகரிக்கக் கோரி,

# வெளிநாடுகளில் படித்த மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் (வெளிநாட்டு பிரிவு) சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

வெளிநாடுகளில் மருத்துவம் படிக்கும் இந்திய மாணவர்கள், வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பை முடித்த பின்பு, இந்திய அரசு நடத்தும் தகுதித் தேர்வில் வெற்றிபெற வேண்டும்.

அதன் பிறகு இந்தியாவில் ஓராண்டு காலத்திற்கு பயிற்சி மருத்துவத்தை மேற்கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகே, அவர்கள் மாநில மருத்துவக் கவுன்சில்களில் பதிவை பெற்று, மருத்துவராக பணியாற்ற இயலும்.

இந்நிலையில் ஒன்றிய அரசு நடத்தும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகும், இந்தியாவில் பயிற்சி மருத்துவம் மேற்கொள்ள வாய்ப்பில்லாமல் ஏராளமான மருத்துவ மாணவர்கள் காத்திருக்கின்றனர்.தமிழ்நாட்டிலும் ஏராளமான மாணவர்கள் காத்திருக்கின்றனர்.

அவர்கள் பயிற்சி மருத்துவத்தை மேற்கொள்வதற்கான இடங்களின் எண்ணிக்கை 10 விழுக்காட்டிலிருந்து 7.5 விழுக்காடாக குறைக்கப்பட்டதே இதற்கு முக்கியக் காரணமாகும்.

மாவட்ட தலைமை மருத்துவமனைகள், பெரிய தனியார் மருத்துவமனைகளில் பயிற்சியை மேற்கொள்ள ஏற்கனவே இருந்த அனுமதி ரத்து செய்யப்பட்டதும் இப்பிரச்சனையை மேலும் அதிகரித்துள்ளது.

இதனால், இந்த மாணவர்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

எனவே, வெளிநாடுகளில் படித்த மருத்துவ மாணவர்கள் பயிற்சி மருத்துவர்களாக பயிற்சி பெறுவதற்கான பயிற்சி மருத்துவர் இடங்களை 7.5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக தேசிய மருத்துவ ஆணையம் (ழிவிசி) உயர்த்திட வேண்டும்.

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் பயிற்சி மருத்துவம் மேற்கொள்ள, ஏற்கனவே இருந்தது போல் ஒன்றிய அரசு மீண்டும் அனுமதி வழங்க வேண்டும்.

என்.எம்.சி. அறிவுரைப்படி தமிழக அரசு, 11 புதிய மருத்துவக் கல்லூரிகளிலும் எப்.எம்.ஜி. மாணவர்களுக்கு பயிற்சி மருத்துவர்களாக பயிற்சி பெற அனுமதி வழங்கிட வேண்டும்.

கொரானா காலத்தில் பல்வேறு வெளிநாடுகளில் மருத்துவப் படிப்பை, ஆன்லைன் மூலம் படித்த மாணவர்களுக்கு, கூடுதல் மிழிஜிணிஸிழிஷிபிமிறி பயிற்சியை வழங்கி, மருத்துவர்களாக பதிவு செய்ய உரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு விரைந்து எடுக்க வேண்டும்.இம்மாணவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காண வேண்டும்.

உக்ரேன் போரில் பாதிக்கப்பட்டு திரும்பியுள்ள மருத்துவ மாணவர்களுக்கு இந்தியாவில் படிப்பை தொடர ஒன்றிய அரசு உதவிட வேண்டும்.

ஒன்றிய அரசும், தேசிய மருத்துவ ஆணையமும் வெளிநாட்டில் மருத்துவம் பயின்ற மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்ற வேண்டும். அவர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு கண்டு அவர்கள் மருத்துவர்களாக உதவிட வேண்டும்.

மருத்துவ மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்ற தமிழக அரசு, ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டும்.

வெளிநாடுகளில் படித்துவிட்டு வரும் மருத்துவ மாணவர்களின் கல்வித் தரத்தை உறுதிப்படுத்துவதுடன், இம்மருத்துவ மாணவர்களின் படிப்புக் காலம், மருத்துவராகும் காலம் வீணாகாமல் காக்கும் வகையில் ,உரிய வழிமுறைகளை வகுத்து ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் வெளிநாட்டு பிரிவுச் செயலாளர் எம்.செந்தில்குமார் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார் .

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி துவக்கி வைத்தார். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து நிறைவுரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 200 க்கும் மேற்பட்ட வெளிநாடுகளில் படித்த மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### மருத்துவ இளநிலைப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான

# சட்ட முன்வடிவின் நிலை என்ன?

## ஆளுநர் மாளிகையின் மழுப்பல் பதில்

தமிழ்நாடு சட்டப் பேரவை இரண்டுமுறை நிறைவேற்றி அனுப்பிய மருத்துவ இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான சட்ட முன் வடிவு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? சட்ட முன் வடிவின் தற்போதைய நிலை என்ன என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2022 மார்ச் 29 அன்று ஆளுநர் செயலகத்திற்கு மனு அனுப்பப்பட்டது.

மிகவும் கால தாமதமாக (98 நாட்கள் கழித்து) ஜூலை 7, 2022 தேதியிட்ட கடிதம் ஜூலை 11, 2022 அன்று கிடைக்கப் பெற்றோம்.

பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டச் செய்தி அதிர்ச்சி தருவதாக உள்ளது.

“சம்மந்தப்பட்ட அதிகாரியின் பரிசீலனையில் உள்ளதாகவும், அதனால் கோரியத் தகவலைத் தெரிவிக்க இயலாது” என்றும் பதிலில் கூறப்பட்டுள்ளது.

“சம்மந்தப்பட்ட அதிகாரி”யின் பரிசீலனை என்றால் எவ்வாறு புரிந்துக் கொள்வது. ஆளுநர் செயலகத்திலா? அல்லது குடியரசுத் தலைவர் செயலகத்திலா?

ஆளுநர் மாளிகையில் இருந்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக சட்ட முன் வடிவு அனுப்பப்பட்டுள்ளது என்று முதல் அமைச்சர் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

முதல் அமைச்சர் அறிவித்து இரண்டு மாதங்கள் கழித்து, “சம்மந்தப்பட்ட அதிகாரியின் பரிசீலனை”யில் உள்ளது என்று தெளிவற்ற, நேரடிப் பதில் தருவதிலிருந்து தப்பிக்கும் சொல்லாடலை ஆளுநர் மாளிகை பயன்படுத்தி உள்ளதால், ஆளுநர் மாளிகையில் இருந்து சட்ட முன் வடிவு குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு சென்றுள்ளதா? இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.

பதில் திருப்தியாக இல்லை, நேரடி பதில் வேண்டும் என்று கோரி ஆளுநர் செயலகத்தின் தகவல் தரும் அடுத்த நிலை அதிகாரிக்கு மேல் முறையீடு மனுவை அனுப்பி உள்ளோம்.

தமிழ்நாடு அரசு, சட்ட முன் வடிவின் தற்போதைய நிலை என்ன என்பதை அறிந்து, தெளிவான தகவலை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கோரி முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளோம்.

தமிழ்நாடு மக்களுக்கு தெளிவான விடைத் தேவை.

சட்ட முன் வடிவு குறித்த உண்மை நிலையை மக்கள் முன் வைத்திட வேண்டும்.

இவ்வாறு பொதுப் பள்ளிக்கான மாநில மேடையின் பொதுச் செயலாளர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

## அரசியல் அதிகாரம் வேண்டும்




இன்றைய தினம் ஒரு நாடு தவிர, உலகத்தில் உள்ள எல்லா தேசங்களும் பொதுவாக முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்டதாகும். அவற்றுள் முதலாளித்துவ சமூகங்கள் சரியான பாதுகாப்புகளோடு வலுவாக இருந்து வருகிறது. இன்றைய முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆட்சி முறைகள் முடியாட்சிக்கு கொஞ்சமும் குறைந்தவைகள் அல்ல. ஏனெனில் அவைகள் சாதாரணமாக ஜனநாயக ஆட்சி என்றே அழைக்கப்பட்டாலும் அதில் நிரந்தர வாழ்க்கையை உடைய வர்க்கத்தாரே முழு ஆதிக்கமும் செலுத்துகின்றனர். அரசியலில் ஏழை எளிய ஜனங்கள் தலை எடுக்க ஒட்டாதபடி, நசுக்கி கொண்டிருப்பதற்கு முதலாளிகளின் கையாயுதமாய் இருப்பதும் இந்த ஆட்சியே ஆகும். அதோடு இவ்வித பூர்சுவா ஜனநாயக ஆட்சிகளில் நிரந்தர வாழ்க்கை உடைய வர்க்கத்தாரின் சர்வாதிகார ஆட்சி முற்றிலும் வெளியில் தோன்றாமல்; ஜனநாயகம் என்னும் அழகிய போர்வையால் மூடி வைக்கப்படுகிறது. இதுவும் கஷ்டப்பட்டு உழைக்கும் ஏழை சமூகத்தாரை ஏமாற்றுவதற்காக முதலாளி வர்க்கத்தார் கையாளும் தந்திரம் என்பதை உணர்க. ஏனெனில் இப்பொழுது இருந்து வரும் பொருளாதார சமுதாய வகுப்பு வேற்றுமைகள், வகுப்பு பூசல்கள், வஞ்சங்கள், கொடுமைகள் ஒழியாத வரையில், புரட்டி அமைக்கப்படாத வரையில் பாமர மக்களுக்கு இந்த பூர்சுவா ஜனநாயக ஆட்சியாலும் உண்மையான அரசியல் விடுதலையோ, அரசியல் சமத்துவமோ ஒரு சிறிதும் ஏற்பட்டு விடாது. *– ஜனசக்தி: 1938 ஜூலை 2*



- ம. இராதாகிருஷ்ணன்

# பெரியார் மண்ணில் சுயமரி

**“உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், முறைகேடுகளில் ஈடுபட்டால் நானே சர்வாதிகாரியாக மாறி நடவடிக்கை எடுப்பேன்” என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். அவருடைய அறிவிப்பு வெளிவந்த அதே நேரத்தில், சமூக வலைதளங்களில் வேலூர் மாநகராட்சி 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் தவமணி அவர்களுடைய கணவர் தாமோதரன் என்பவர் தூய்மை பணியாளர்களைத் தரக்குறைவாகப் பேசி மிரட்டும் காணொளி ஒன்று வைரலாகிக் கொண்டு இருக்கிறது.**

அதில் சாதிய மேலாதிக்க திமிர், பதவியைப் பயன்படுத்தி முறைகேடுகளில் ஈடுபடும் வேட்கை, ரவுடித்தனம், ஆணாதிக்கம் என்று சகலமும் அடங்கி இருக்கிறது. மாமன்ற உறுப்பினர் பதவி என்பது முதலீடு செய்த தொழில், அதில் லாபம் அடைவது தன்னுடைய இலக்கு என்று அவர் சொல்லாமல் சொல்லுகிறார். பின்னர், மன்னிப்பு கேட்டதாக தெரிகிறது.

வேலூரில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இத்தகைய நிலைமை பரவலாக உள்ளது. அதனால் தான் தமிழ்நாடு உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளனம் கடந்த மாதம் 21 ஆம் தேதி அன்று தமிழ்நாடு முழுமையிலும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த அறைகூவல் விடுத்தது. உள்ளாட்சி தொழிலாளர்களின் ஏஐடியூசி சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.


இதில் தர்மபுரியில் 500 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலும் பெண்கள். அவர்கள் பேசும்போது, ஒருமையில் பேசுவதும், தகாத வார்த்தையில் பேசுவதும், சாதிப் பெயரைச் சொல்லி இழிவு படுத்துவதும், தாக்க முற்படுவதும் நீக்கமற நிறைந்து இருப்பதாக கண்ணீர் மல்க கூறினர். மேலும் கொசு ஒழிப்பு பணியாளர்கள் நான்கு மாதமாக ஊதியம் வழங்கவில்லை என்று முறையிட்டதற்கு அம்மாவட்ட ஆட்சியர், “நீங்க ஒழுங்கா வேலை செய்திருக்க மாட்டீக” என்று கூறியதாகச் சொன்னார்கள்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் இரா. முத்தரசன், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தொழிலாளர்களை மிரட்டுவதை ஏற்க முடியாது என கண்டித்தார்.

அதே நாளில், தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர் தாக்குதல் நடத்தி, தகாத முறையில் நடந்து கொண்டதை கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மதுரை மாவட்டம் பனையூர் ஊராட்சி மன்ற தலைவர் இப்படித்தான் நடந்து கொள்கிறார் என்று ஆர்ப்பாட்ட செய்தியைப் பார்த்த நண்பர் ஒருவர் பகிர்ந்து கொண்டார்.

ராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் பேரூராட்சியில் சங்க கிளை தலைவர் ஜெயராஜன் மீது பேரூராட்சி அலுவலர் ஒருவர் தாக்குதல் நடத்த முயன்று, தகாத வார்த்தையில் பேசி உள்ளார். இதனை கண்டித்து போராடிய பின்பு அவர் மன்னிப்பு கோரியிருக்கிறார்.

சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சியில், ஒப்பந்ததாரர் சட்டவிரோதமாக பறித்துக் கொண்ட ஊதியத்தை வழங்க தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு ஒப்புக்கொண்டு, ஒப்பந்தம் போட்ட நகராட்சி ஆணையர், ஊதியத்தை வழங்காத நிலையில் ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்கள் 5 பேர் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர். தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் கே. சுப்பராயன் எம்.பி., நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே. என். நேருவின் நேரடி கவனத்திற்கே இந்தப் பிரச்சனையை கொண்டு சென்றார்.



காரைக்குடி நகராட்சியில், சேகரித்த குப்பைகளை தலையில் சுமந்து வர நிர்பந்திக்கப்பட்டனர். பொதுமக்கள் பிரித்துத் தர வேண்டிய வேலையை தொழிலாளிகளே செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**சேலம் மாவட்டம் தேவூர் பேரூராட்சி நிர்வாக அதிகாரி கையால் மலம் அள்ள கட்டாயப்படுத்துகிறார். கையால் மலம் அள்ள மறுத்த தொழிலாளி ராஜ்குமார் வேலையை விட்டு நீக்கப்பட்டு இருக்கிறார். கையால் மலம் அள்ளும் தடைச் சட்டம் தான் இருக்கிறது, கையால் மலம் அள்ளுவதைக் கட்டாயப்படுத்த சட்டம் இல்லை என்று இந்த அதிகாரிக்கு உணர்த்த வேண்டியது யார்? என்று தெரியவில்லை. அதிலும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும் என்ற அடிப்படை அறிவு கூட இந்த அதிகாரிக்கு இல்லை.**

நாளிதழ் செய்தி ஒன்றின்படி, பழனி நகராட்சியில் பெண் தொழிலாளிகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆட்படுத்திய மாரிமுத்து என்ற மேற்பார்வையாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். இவை அனைத்தும் சமீபத்திய உதாரணங்கள்.

தொழிலாளிகளின் மீதான தாக்குதலின் போது, சில நேரங்களில் தாக்கியவர் “மன்னிப்பு கேட்டார்” என்று முடிக்கப் படுகிறது. நிச்சயமாக இந்த மன்னிப்பு சாவர்க்கர் கேட்ட மன்னிப்புக்கு ஒப்பானது. உளப்பூர்வமாக தவறை உணர்ந்து கேட்ட மன்னிப்பு இல்லை. தமிழ்நாடு முழுமையிலும் இந்த நிலைமை (விதிவிலக்குகளைத் தவிர) நீக்கமற நிறைந்திருக்கிறது.

ஆங்காங்கே சிறந்த நிர்வாகிகளும், அலுவலர்களும் இருக்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. மாமன்றங்களில், நகர் மன்றங்களில், பேரூர் மன்றங்களில், ஊராட்சிகளில் தூய்மை

# திருத்துறைப்பூண்டியில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் உள்ள பிரசித்தி பெற்ற பிறவி மருந்தீஸ்வரர் கோயில் இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமானது ஆகும்.

இக்கோயிலில் செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் ராஜா. கோவில் நில குத்தகை விவசாயிகளை அச்சுறுத்தியும் நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சிக்கும் போக்கை கண்டித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நகர செயலாளர் சுந்தர், நகர தலைவர் பக்கிரிசாமி ஆகியோர் தலைமையில் கோயில் முன்புகண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.






இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., ஒன்றியக்குழு தலைவர் பாஸ்கர், சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் ஞானமோகன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# இளைஞர் விரோத சக்திகளை இடுப்பொடித்து வி

# மாணவர் விரோத சக்திகளை மண்டையில் அடித்து

# யாதைக்குப் பங்கம் ஏன்?



பணியாளர்களுக்காக குரல் எழுப்புபவர்களாக இப்போதும் இடதுசாரிகளும், முற்போக்கு எண்ணம் கொண்ட சமூக செயற் பாட்டாளர்கள் மட்டுமே இருக்கிறார்கள்.

நூறாண்டுகளுக்கு மேலாக சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் பெரியார் மண்ணில் தமிழ்நாட்டினுடைய பொது சுகாதாரத்தை பேணிக் காக்கும், கடை நிலையிலும் கடைநிலையில் இருக்கக்கூடிய, இந்தத் தூய்மை பணியாளர்களுக்கு மட்டும் சுயமரியாதை இருக்கக் கூடாது என்று கருதும் நிலை உள்ளது. ஏன் இந்த நிலைமை?

சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படுத்துகிற இத்தகைய நடவடிக்கைகள் மட்டுமல்ல; தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணைப்படி குறைந்தபட்ச கூலி கூட கிடைக்காமல் தான் தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் பணி புரிகின்றனர். அரசாணையை அமலாக்கு என்றால் முடியாது, முடிந்ததைப் பார் என்று மிரட்டல் வருகிறது. மாவட்ட ஆட்சியர் தான் சொல்ல வேண்டும் என்கிறார்கள். முன்மாதிரியாக, ஈரோடு மாவட்ட ஆட்சியர் ஆணை வெளியிட்டார். தொடர்ந்து இப்போது கோவை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டு இருக்கிறார். இப்போது, மாவட்ட ஆட்சியர் சொன்னாலும் தர முடியாது என்ற நிலை உள்ளது.

தொழிலாளிக்கு தருவதற்காக ஒப்பந்ததாரரிடம் தரும் தொகை தொழிலாளிக்கு வந்து சேர வேண்டும்; தொழிலாளியின் ஊதியத்தைப் பறிக்க அனுமதிக்க கூடாது என்றால்; பணி நீக்கமும், பணியிட மாற்றமும் பரிசாக கிடைக்கிறது. இவ்வாறு அரசாணை, சட்டம், நீதிமன்ற உத்தரவு என அனைத்தையும் துச்சமாக கருதும் மனநிலை எப்படி உருவானது???

ஈரோடு நகர்மன்ற தலைவராக தந்தை பெரியார் பணிபுரிந்த போது, ராஜாஜி நகர் மன்ற தலைவராக இருந்த சேலத்தில் இருந்து வந்த கடிதம் "ஈரோட்டில் சுகாதார வேலைகள் சிறப்பாக நடப்பதையும், பராமரிக்கப்படுவதையும் நேருக்கு நேர் பார்த்தோம். தங்களுடைய சுகாதாரத் துறை அதிகாரியை எங்களுக்கு தர முடியுமா?" என்று கேட்கிறது.

**சுகாதார வேலை என்றால் தொழிலாளர் நலனும் இணைந்தது. அது மட்டும் அல்ல, பிளேக் நோய் ஏற்பட்டு மக்கள் அவதியுற்ற போது மருத்துவ சிகிச்சைக்கு உதவியது மட்டும் அல்லாமல் மரணம் அடைந்தவர்களை தனது தோளில் தூக்கிக் கொண்டு போய் அடக்கம் செய்தவர் தந்தை பெரியார்.**

சுயமரியாதை இயக்கத்தை தமிழ்நாட்டில் கட்டி அமைத்ததில் தந்தை பெரியாருக்கு எவ்வளவு பங்கு இருக்கிறதோ அதற்கு நிகரான பங்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலருக்கு இருக்கிறது என்று பேரறிஞர் அண்ணா எழுதினார். அந்த சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சென்னை நகர மன்ற உறுப்பினராக இருந்தபோது, பாதாள சாக்கடை, கழிவு நீரை, குப்பைகளை அகற்றுவது, இவைகளை செம்மையுறச் செய்தல் , பிச்சைக்காரர் பாதுகாப்பு, ஏழைகளுக்கு நல்ல வீடுகளை அமைக்க வழிவகை செய்தல் முதலியவைகளைப் பற்றியே அதிகம் கேள்விகளைக் கேட்டார். காலரா நோய் ஏற்பட்ட அறிகுறி தோன்றிய உடனே சானிட்டரி இன்ஸ்பெக்டர் (சுகாதார ஆய்வாளர்கள்) தீவிரமாகப் பணியாற்ற ஏற்பாடு செய்தார். சாக்கடை கழிவு, குப்பைகளை, மல ஜலங்களை அகற்றுவது, நகரத்தில் நிலவும் சுகாதார நிலைமையை மேம்படுத்துவது முதலியவைகளில் கவனம் செலுத்துவது, ஆகியவை நகரான்மை கழக இலாகாக்களின் தலையாய கடமையாகும் என்று நகர்மன்றத்தில் முழங்கினார்.

தொழிலாளர் உரிமைக்காக நகர்மன்றத்தில் மட்டுமல்ல, அவர்களை சங்கமாக அணிதிரட்டி, தலைமையேற்று தொடர்ந்து போராடினார் சிந்தனை சிற்பி சிங்காரவேலர். தெருக்கூட்டுவோர் சங்கம், சென்னை நகராண்மைக் கழக ஊழியர்கள் சங்கம், கார்ப்பரேஷன் லேபர் யூனியன் ஆகியவை அவர் வழிகாட்டுதலில் தொடங்கிய சங்கங்களே!

சிங்காரவேலருக்கும், தந்தை பெரியாருக்கும் உற்ற தோழர், தொழிற்சங்கத்தின் தந்தை என போற்றப்பட்ட ரூ தோழர் சக்கரை செட்டியார் ரூ சென்னை மாமன்ற உறுப்பினராகவும் மேயராகவும் இருந்தார். அக்காலங்களில், "தூய்மை பணியாளர்கள் குறித்து குற்றம் சொல்ல நம்மில் யாருக்கும் தார்மீக உரிமை இல்லை. அவர்கள் செய்யும் வேலையை செய்வதற்கு நாம் தயாராக இல்லாத போது அவர்களை குற்றம் சொல்வதை ஏற்க முடியாது. ஒரே ஒரு நாள் அவர்கள் வாழும் இடங்களில் நீங்கள் இருக்க முடியுமா? " என்று மாமன்றத்தில் கேள்வி எழுப்பினார். அவர்களுடைய ஊதியம், பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்காக மாமன்றத்திலும் வீதிமன்றத்தில் தொடர்ந்து போராடினார்.

நான்கு முறை சென்னை மாமன்ற உறுப்பினராக இருந்தார் எஸ். கிருஷ்ணமூர்த்தி. காங்கிரசை எதிர்த்து சுயேட்சையாக மேயருக்கு போட்டியிட்டார்.அறிஞர் அண்ணா ஆதரித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது. வெற்றி பெற்று மேயரானார்.

மக்கள் தன்னை தேடி வர வேண்டாம் என்று பூங்காக்களின் சிமெண்ட் பெஞ்சே தனது தங்கும் இடமாக மாற்றிக் கொண்டு பணிபுரிந்தார். எங்காவது சாக்கடை அடைத்துக் கொண்டால், குப்பை குவிந்திருந்தால் தானே நேரில் சென்று களத்தில் இறங்கி விடுவார். அதிகாரிகள் பதறிப் போய் ஓடி வந்து சரி செய்வர். சென்னையில் இவர் நடத்திய குடிசைவாழ் மக்கள் மாநாட்டில் கலந்து கொண்ட பேரறிஞர் அண்ணா, 'குடிசைகள் கோபுரம் ஆகும் ' என்று அறிவித்ததின், விளைவு குடிசை மாற்று வாரியம்.

ஒருமுறை மாமன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் துர்நாற்றம் வீசுவதாக முகம் சுளித்தனர். ஆமாம்! கழிவுநீர் அடைப்பை சரி செய்ய இறங்கிய காலோடு மேயர் கிருஷ்ணமூர்த்தி மாமன்ற கூட்டத்திற்கு வந்து விட்டார். இதனைக் கண்டறிந்து மாமன்ற உறுப்பினர்கள் சொன்ன போது, "இங்கு இருப்பவர்களிடம் உள்ள நாற்றத்தை விட இது ஒன்றும் மோசமானதல்ல" என்று முகத்தில் அறைந்ததைப் போல் கூறினார். மாமன்றம் அமைதியானது.

இவர் தமிழ்நாட்டு தொழிலாளி வர்க்கத்தின் முதல் தொழிலாளர் இதழான "தொழிற்சங்க செய்தி" ரூ ன் முதல் ஆசிரியர் சக்கரை செட்டியாருடன் இணைந்து 1953இல் இந்த இதழைத் தொடங்கினார். (இன்றும் தொடர்ந்து தொழிலாளர் நலன்களுக்காக முழங்கி வருகிறது அந்த இதழ்..) தூய்மை பணியாளர் வாழ்வு மேம்பட, திட்டங்கள் தீட்டி நிறைவேற்றினார். சென்னை வரலாற்றில் மக்கள் மேயர் என்று மக்களால் அழைக்கப்பட்ட ஒரே மேயர் இவர் தான்.

மதுரை மாமன்ற உறுப்பினராக, தொழிற்சங்க தலைவராக இருந்த தோழர் எஸ். பி. ஆண்டி மரணம் அடைந்த போது, அவரது வீடு இருந்த பகுதியில் , தெருக்கள் அனைத்திலும் பல நூற்றுக்கணக்கான தூய்மை பணியாளர்கள் விழுந்து, புரண்டு, கதறி கதறி அழுத காட்சியை நேரில் பார்த்த தோழர்கள் சொல்ல கேட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக திகழ்ந்த ஏஐடியுசி யின் மாபெரும் தலைவர் கே.டி.கே. தங்கமணி உள்ளிட்ட தலைவர்களோடு இணைந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் அமைச்சராக இருந்த அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தொழிலாளர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கலைஞர் ஆதரவோடு மேற்கொண்டார். அவர் அமைச்சராக இருந்தபோதுதான் தூய்மை பணியாளர்கள் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை உள்ளடக்கிய முதல் அரசாணை தமிழ்நாட்டில் வெளிவந்தது.

இன்றைய முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போது தான் கால மாற்றத்திற்கு ஏற்ப தொழிலாளர்களின் வேலை அளவு நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது.

ஆனால், இன்றைய சூழலில் சுயமரியாதை இயக்கம் வழிகாட்டிய விழுமியங்கள் அனைத்தும் காணாமல் போனதே... ஏன்?

தனியார்மயம், காண்ட்ராக்ட் மயம் போன்ற உலகமயத்தின் விளைவுகள் கடைக்கோடியிலும் கடைக்கோடியில் இருக்கிற இத்தொழிலாளிகளின் சுயமரியாதையை, கண்ணியத்தை, வாழ்க்கையை நித்தம் நித்தம் பறித்துக் கொண்டிருக்கிறதே!

சாதியமும், வருண தர்மமும் நீடித்திருக்க வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்ட கோட்ஷேயின் சீடர்கள், சமநீதியையும், சமூக நீதியையும் நிலைநாட்ட போராடும் திமுக அரசுக்கு, இது விசயத்தில் அறிவுரை கூறும் அளவுக்கு நிலைமைகள் உள்ளனவே. தமிழகம் மீண்டெழ வேண்டாமா? அதற்கு தமிழக முதல்வர் அறிவித்ததை போல, நிச்சயமாக, இந்த நிலைமைகளை மாற்ற அவர் சர்வாதிகாரியாக மாறத்தான் வேண்டும்!

சொன்னதைச் செய்வார் என்று நம்புவோம்!

தொடர்புக்கு: **9486362703**



## அரசியல் அதிகாரம் வேண்டும்

ராம ராஜ்ஜிய அதிபதி ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் தன்னுடைய சொந்த செலவுகளுக்காக பொது ஜன வருமானத் திலிருந்து 18 இல் ஒரு பாகத்தையும், உலக கோடீஸ்வரர்களில் ஒருவர் என மதிக்கப்படும் ஹைதராபாத் நிஜாம் அவருடைய சொந்த சொத்துக்களில் இருந்து ஆண்டொன்றுக்கு 1 1/4 கோடி ரூபாய் வருமானம் வந்தும் கூட தனக்கென்று அரசின் பொக்கிஷத்தில் இருந்து 16 ல் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கிறார். மைசூர் சமஸ்தானம் கிரேட் பிரிட்டனை விட விஸ்தீரனத்தில் ஏழு மடங்கு சிறியது, வருமானத்தில் 350 மடங்கு குறைந்தது.அப்படி இருந்தும் மைசூர் திவான் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் சம்பளத்தில் 6 ல் 5 பங்குக்கு சமதையாக எடுத்துக் கொள்கிறார். ஹைதராபாத் சமஸ்தானம் கிரேட் பிரிட்டனை விட விஸ்தீரனத்தில் 4 மடங்கு சிறியது, வருமானத்தில் 175 மடங்கு குறைந்தது. அப்படி இருந்தும் குபேர திவான்ஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் சம்பளத்திற்கு சரி நிகர் சமதையாக எடுத்துக் கொள்கிறார்.

மிக முற்போக்கு(? ) வாய்ந்த இந்திய சமஸ்தானங்களின் நிலையே மேற்கூறியவாறு என்றால், இந்நாட்டில் உள்ள மற்ற 500க்கும் மேற்பட்ட குட்டி மன்னர்களைப் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. அநேக மன்னர்கள் தங்கள் சொந்த டாம்பீக செலவுக்கென்று மட்டும் தேச வருமானத்தில் 3 ல் ஒரு பங்கையும், ஏன் சரிபாதியையும் கூட விழுங்கி விடுபவர்களாக இருக்கிறார்கள். இந்திய அரசர்களுடைய யோக்கியதைகள், நடவடிக்கைகள், ஒழுக்கங்கள் என்பவைகள் எல்லாம் பொதுவாக வெளியில் சொல்வதற்கே வெட்கக் கேடானதாகும்.

*– ஜனசக்தி: 1938 ஜூலை 2*



ரட்டுவோம்!
விரட்டுவோம்!

திருப்பூரில் ஆகஸ்ட்
6, 7, 8, 9 தேதிகளில்
சங்கமிப்போம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநில மாநாடு

# மதுரை சேதுவின் தாயார் லட்சுமி அம்மாள் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தேசியக் குழு உறுப்பினர் மற்றும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினராக பணியாற்றி, கடந்த ஆண்டு காலமான மதுரை தோழர்.பி.சேதுராமனின் தாயார் திருமதி.லட்சுமியம்மாள் (80) ஜூலை 12 அன்று காலையில் மதுரை அருகில் உள்ள அச்சம்பத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அச்சம்பத்து பிச்சை பிள்ளையின் வாழ்விணையரான திருமதி.லட்சுமியம்மாளுக்கு இரண்டு மகள்கள் இருக்கின் றார்கள். லட்சுமி அம்மாள் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது மருமகன், மகள்கள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### விபத்தில் இறந்த

# மீனவர் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் கடல் அட்டை மீன் பிடிப்பதற்கான தடையை விலக்கக் கோரி நீண்டகாலமாக போராடி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக ஜூலை 11 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இரண்டாயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்து கொள்ள 22 மீனவக் கிராமங்களில் இருந்து மீனவர்கள் வந்திருந்தனர். இவர்களில் மண்டபம் பகுதி மீனவர்கள் ஆர்ப்பாட்டம் முடித்து வீடு திரும்பிய வாகனம் சாலை விபத்தில் சிக்கியதில் அன்சார் அலி, முகைதீன் அப்துல்காதர், ரஷீப் அலி மற்றும் சேது ஆகிய நான்கு மீனவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் 19 மீனவர்கள் கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த மீனவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்த மீனவர்களுக்கு அவசியமான சிகிச்சைகள் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்

கடல் வாழ் உயிரிமான "அட்டை மீன்" ஒவ்வொரு முறையும் சுமார் 1.5 லட்சம் முட்டையிடும் நிலையில், இந்த வகை மீனை அரிய வகை உயிரினமாக அறிவித்து, மீன் பிடிக்க தடை விதித்துள்ள தமிழ்நாடு அரசின் மீன் வளத்துறையின் தவறான நடவடிக்கை தான் மீனவர்கள் போராட்டத்திற்கும், மீனவர்களின் உயிரிழப்புக்கும் காரணமாகும். ஒன்றிய அரசின் மீன்வளத்துறை தடை செய்யாத, அரிய வகைப் பட்டியலில் சேர்க்காத அட்டை மீன் பிடிக்க தமிழ்நாடு அரசு விதித்துள்ள தடையை இனியும் தாமதிக்காமல் நீக்க வேண்டும். இந்த விபத்தில் இறந்த மீனவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்குவதுடன், அவர்களது குடும்பத்தில் தலா ஒருவருக்கு அரசு பணி வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### அரசு மற்றும் அரசு உதவி பெறும்

# பள்ளி மாணவர்களுக்கு பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் வழங்கிடுக

## மாணவர் பெருமன்றம் வலியுறுத்தல்

அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், மாநிலத் தலைவர் மௌ.குணசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு முழுவதும் கோடை விடுமுறைக்கு பிறகும், கொரோனாவால் பாதிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கல்வித் துறை கண்ட மிகப்பெரிய சவால்களுக்கு பிறகும் இந்த கல்வியாண்டிற்கான வகுப்புகள் ஜூன் 13ஆம் தேதி தொடங்கப்பட்டது. பள்ளிகள் தொடங்கி 20 நாட்களுக்கு மேலாகியும் தற்போது வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பெரும்பான்மையான வகுப்புகளுக்கு பாடநூல்கள் மற்றும் நோட்டு புத்தகங்கள் வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகள் கொரோனா பொதுமுடக்கம் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டு மாணவர்களுக்கும் கல்விக்குமான இடைவெளி அதிகரித்தது. ஆனால் இந்த ஆண்டு பள்ளிகள் சரியான நேரத்தில் திறந்தும் கூட கல்விக்கும் மாணவர்களுக்கும் இடையேயான இடைவெளியை ஏற்படுத்துவதாக நோட்டு புத்தகங்கள் விநியோகத்தின் மீதான காலதாமதம் அமைந்திருக்கிறது. எனவே பள்ளிக்கல்வித்துறை மற்றும் தமிழ்நாடு அரசு இதை கவனத்தில் கொண்டு அனைத்து பள்ளிகளுக்கும் பாடநூல்கள் மற்றும் நோட்டு புத்தகங்களை உடனடியாக அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநில குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

# அரசு மருத்துவர்களின் ஊதியத்தை உடனடியாக உயர்த்திட வேண்டும்




## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து, இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஊதிய உயர்வு, காலமுறை பதவி உயர்வு மற்றும் படிகள் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக அரசு மருத்துவர்கள் நீண்ட காலமாக போராடிவருகிறார்கள். அவர்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும். அரசாணை G0.354படி, pay Band 4 12 ஆண்டு முடிந்து 13 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வழங்க வேண்டும்.

அல்லது , குறைந்த பட்சம் அனைத்து மருத்துவச் சங்கங்களும், தற்பொழுது பேச்சுவார்த்தைக்குப் பிறகு, ஏற்றுக்கொண்டுள்ளபடி, 14 ஆம் ஆண்டு துவக்கத்திலாவது வழங்க வேண்டும்.

ஏற்கனேவே, மேற்படிப்புக்கான ஊதிய உயர்வு (PG increment ) முறையை, அதாவது பட்டய படிப்பு (Diploma ) முடித்தால் ஒரு இன்கிரீமெண்ட், முதுநிலை (Degree) படிப்பு முடித்தால் 2 இன்கிரீமெண்ட், உயர் சிறப்பு படிப்பு (Super speciality) படித்தால் 4 இன்கிரீமெண்ட் என நடைமுறையில் உள்ளது. இந்த இன்கிரீமெண்ட்டுகளை உயர்த்த வேண்டும்.

பட்டயப் படிப்பு முடித்தால் 2 இன்கிரீமெண்ட், முதுநிலை படிப்பு முடித்தால் 4 இன்கிரீமெண்ட், உயர் சிறப்பு படிப்பு படித்தால் 8 இன்கிரீமெண்ட் என இன்கிரீமெண்டுகளை உயர்த்த வேண்டும். இந்த இன்கிரீமெண்டுகளை கொரானா காலத்துக்கு முந்தைய தேதியிட்டு வழங்க வேண்டும்.

அதுவே அனைத்து மருத்துவர்களுக்கும் நிரந்தரமாகவும், நீண்டகாலத்தும், குழப்பமின்றியும் நன்மை பயக்கும்.பயனளிக்கும்.

அரசாணை GO.293, குறிப்பிட்ட சில மேல்படிப்பு படித்தவர்களை Scarce எனவும் சிலவற்றை Non Scarce எனவும் வகைப்படுத்தி, PG அலவன்ஸ் வழங்குகிறது. இது சமத்துவமின்மையை மருத்துவர்களிடையே உருவாக்குகிறது. பிரிவினையையும், பிளவையும் ஏற்படுத்துகிறது.

குறிப்பிட்டப் படிப்பு படித்த மருத்துவர்களுக்கு மட்டும், ஒரு குறிப்பிட்ட தொகையை Service சீனியாரிட்டி எதையும் கருத்தில் கொள்ளாமல், PG அலவன்ஸாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எப்போது வேண்டுமானாலும் Scarce படிப்பு என்பது Non Scarce என அறிவிக்கப்பட்டு, பலருக்கு றிநி அலவன்ஸ் கிடைக்காமல் செய்துவிடும். அல்லது குறைத்துவிடும்.

இது மருத்துவர்களிடையே பாரபட்சப் போக்கை உருவாக்கும். இன்கிரீமெண்ட் பெறுவதில் நிச்சயமற்ற நிலையையும் ஏற்படுத்தும். எனவே GO.293 யை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

2009 ஆம் ஆண்டு வெளியிட்ட GO 354 என்ற அரசாணை, அரசு மருத்துவர்களுக்கான அடிப்படை தகுதியான எம்பிபிஎஸ் படிப்பிற்கான அடிப்படைத் ஊதியம் தொடர்புடைது. ஊதியப்பட்டை 4 ஐ பணியில் சேர்ந்த 12 ஆம் ஆண்டின் முடிவில் வழங்குவது பற்றி கூறுகிறது.

GO 293 அரசாணை என்பது Diploma, MD,MS, MCh போன்ற மேற்படிப்பு படித்தவர்க்களுக்கான படிகள் ( Allowances) தொடர்பான புதிய அரசாணையாகும்.

இந்த இரண்டு வெவ்வேறு அரசாணைகளை ஒன்றிணைப்பது, ஒன்றை விட்டுவிட்டு மற்றொன்றை வழங்குவது, ஒன்றை மட்டும் முதலில் வழங்குவது போன்ற விவாதங்களை உருவாக்குவது சரியல்ல.

இந்த நடவடிக்கை ஊதிய உயர்வை வழங்காமல் தள்ளிப் போடவும், குழப்ப நிலையை நீட்டிக்கவே வழிவகுக்கிறது.

இது, அரசு மருத்துவர்களை உயர் கல்வி படித்தவர்கள் மற்றும் உயர் கல்வி படிக்காதவர்கள் என பிளவுபடுத்துகிறது. எனவே, இத்தகைய முயற்சிகளை கைவிட வேண்டும்.

கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துவருகிறது. இது கவலை அளிக்கிறது. கொரோனா தடுப்பூசிகள் கொரோனா இறப்புகளை தடுப்பதில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளன. இந்தியாவில் கொரோனா தடுப்பூசிகள் 43 லட்சம் இறப்புகளை தடுத்துள்ளன. எனவே, கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் மத்திய மாநில அரசுகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பூஸ்டர் தடுப்பூசியை தகுதி உள்ள அனைவருக்கும் இலவசமாக செலுத்த வேண்டும்.

தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள, பதிவு பெற்ற மருத்துவர்களை முறைப்படுத்தும் வரைவு (Registered Medical Practitioner Regulations Draft) அறிக்கையை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும். இது இந்தியா முழுவதும் அனைத்து மருத்துவர்கள், பொதுமக்கள் மற்றும் அனைத்து மருத்துவமனைகள் மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் மிக முக்கியமான அறிக்கையாகும்.

இந்த அறிக்கை மருத்துவர்களுக்கும், சிறிய மருத்துவமனைகளுக்கும், ஏழை எளிய மக்களின் நலன்களுக்கும் எதிரானது. கார்ப்பரேட் மருத்துவமனைகளுக்கு சாதகமானது. எனவே, அந்த வரைவு அறிக்கையை திரும்பப் பெற வேண்டும்.

மருத்துவர்களின், பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு, புதிய வரைவு அறிக்கையை, அனைவரின் கருத்துக்களையும் அறிந்து தேசிய மருத்துவ ஆணையம் உருவாக்க வேண்டும்.

ஒன்றிய அரசு மருத்துவக் கல்வியை இந்துத்துவமயமாக்குவதையும், கார்ப்பரேட் மயமாக்குவதையும் கைவிட வேண்டும்.

பல்மருத்துவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரந்தர அடிப்படையில் நியமிக்க வேண்டும். பல்மருத்துவ படிப்புகளில் உள்ள பிரேக் சிஸ்டத்தை ரத்து செய்திட வேண்டும்.

முதல்வர் காப்பீடு திட்டத்தை அரசு மருத்துவமனைகளில் நடைமுறை படுத்துவதை கைவிட வேண்டும். அனைத்து சிகிச்சைகளையும், பரிசோதனைகளையும் முழுமையாக இலவசமாக வழங்கிட வேண்டும்.

குழந்தையின்மை சிகிச்சைகளை முழுமையாக, ஏழை பெண்கள் நலன் கருதி மாவட்ட அளவில் அரசு மருத்துவமனைகளில் வழங்க வேண்டும்.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் உற்பத்தி செய்ய வேண்டும்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களின் பணி இடங்களை உருவாக்க வேண்டும். நிரந்தர அடிப்படையில் அவர்களை பணிஅமர்த்த வேண்டும். பயற்சி மருத்துவர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள், அரசு மருத்துவர்களுக்கு 24 மணி நேரம் 48 மணிநேரம் என தொடர்ச்சியாக பணி வழங்கக்கூடாது.

மருத்துவ மாணவர்கள் நலனை பாதுகாக்க அவர்களுக்கென தனியான நல வாரியம் அமைக்க வேண்டும்.

விஸிங்வி தேர்வில் தேர்ச்சி பெற்று, தற்காலிகமாக பணியாற்றி, பணிநீக்கம் செய்யப்பட்ட மருத்துவர்களுக்கு மீண்டும் நிரந்தர அடிப்படையில் பணி அமர்த்த வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## பவானி பி.எஸ்.பூபதி மறைவு



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பவானி ஒன்றியத்தில் நீண்ட நெடுங்காலமாக ஏ ஐ டி யு சி கட்டிட கட்டுமர சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர், பவானி வட்டார ஜமக்கார நெசவுத்துள்ளார் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர் பி.எஸ்.பூபதி மரணம் அடைந்தார். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலையும், அவரது குடும்பத்திற்கு அனுதாப்பங்களையும் தெரிவிக்கிறது.

# தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் முறைகேடு

## நடவடிக்கை எடுக்க வி.தொ.ச. கோரிக்கை!

தருமபுரி மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் திறன் குறைந்தவர்களுக்கு ஒதுக்கும் நிதியைவிட பல மடங்கு நிதி கட்டுமானபணிகளுக்கு ஒதுக்கீடு செய்து 40% திறனற்ற தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும் விதிமுறையை 10% குறைத்து அந்த பணியை வேலை அட்டை பெற்ற வேலை செய்யாமல் இருப்பவர்களை பயன்படுத்தி பெருத்த முறைகேடுகள் மாவட்டம் முழுவதும் நடந்து வருகிறது. இதற்கு பணிதளபொறுப்பாளர் முதல் மாவட்ட திட்ட இயக்குனர் வரை இதனை கண்டுகொள்ளாமல் ஒப்பந்ததார்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் எந்த பணியும் ஒப்பந்ததாரர்கள் செய்ய கூடாது என்று இருந்தும் மாவட்டம் முழுவதும் ஒப்பந்ததாரர்கள் செய்து வருவது MGNRGEAவின் சட்டத்திற்கு விரோதமானது, எனவே இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் மாவட்ட நிர்வாகத்தினை கேட்டு கொள்கிறது என்று தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் தெரிவித்துள்ளார்.

## பிற மாநிலச்செய்திகள்- "திசை எட்டும்"



### தெலங்கானா

**தொடர்ந்து கூட்டுப் போராட்டம் நடத்திட.**

## தெலுங்கானா மாநில அகில இந்திய விவசாய சங்கம் அறைகூவல்

தெலுங்கானா மாநில அகில இந்திய விவசாய சங்கத்தின் 2 ஆவது மாநிலமாநாடு விளக்கப் பொதுக்கூட்டம், சூர்யாபேட் மாவட்டம் ஹுசூர்நகரில் ஜீலை 1 அன்று மாநிலத் தலைவர் பைசா பத்மா தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. அகில இந்திய விவசாய சங்கத் தலைவர் ராவுலா வெங்கையா பங்கேற்றார்.

சிறப்புரையாற்றிய அகில இந்தியவிவசாய சங்க தலைவர் ராவுலா வெங்கையா தனது உரையில், ''தீரத்துடன் அயராது போராடி விவசாயிகளுக்கு விரோதமான ஒன்றிய பாஜக அரசின், 3 வேளாண் சட்டங்களைத் திரும்ப பெற வைத்த விவசாயிகள், அதே தீரத்துடன் அயராது போராடி கூட்டு இயக்கம் கண்டு, மக்கள் மற்றும் விவசாயிகளின் விரோத நரேந்திரமோடி ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் ''என்று அறைகூவல்விடுத்தார்.

''விவசாயிகள் விரோதமான அந்த 3 வேளாண்மை சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய அதே மூர்க்கத்தனமான பிடிவாதப் போக்கினை, பணமதிப்பு செல்லாது என்ற சட்டம், ஜிஎஸ்டி வரிச் சட்டம், 44 தொழிலாளர்நலச்சட்டங்களை 4 சட்டமாக குறைத்தது, காஷ்மீர்மாநில சிறப்பு அந்தஸ்து 370 ஷரத்தை ரத்து செய்தது ஆகிவற்றிலும் மோடி காண்பித்தார்''

ஆனால் வீரமிக்க நமது விவசாயிகள்படை தீரத்துடன் ஒன்றரை ஆண்டுக்காலம் தொடர்ந்து போராடி, மோடி கொண்டு வந்த வேளாண் விரோத சட்டங்களை திரும்பப் பெற்று வீர வரலாறு படைத்தனர்

2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்குவேன் என வீர வசனம் பேசியது நினைவிருக்கலாம். ஆனால் அந்த திசையில் ஒரு துரும்பைக் கூட மோடியார் அசைக்கவில்லை என்பது நிதர்சன உண்மையாகிவிட்டது.

நமது நாட்டில் 65 சதவீதத்திற்கு மேற்பட்ட உழைப்பாளிகள் வேளாண்மைத் துறையைச் சார்ந்து உள்ளனர். அவர்களுக்கு ஏதும் செய்யாத நரேந்திரமோடியார், கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு அல்லும் பகலும் அயராது பாடுபடுகிறார். ஆனால் விவசாய பெருமக்களோ, கடனிலும் பொருளாதார நெருக்கடியாலும், தற்கொலை செய்யும்கொள்ளும் கொடும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

நாம் நாடாளுமன்றத்திலும் சரி, பொது வெளியிலும் சரி விவசாயிகளின் துயரங்களுக்குத் தீர்வு காண சொல்லி குரல் எழுப்பினால், மத்திய பாஜக அரசு கேளாக் காதினராக உள்ளன.

எனவே இந்த ஒன்றிய அரசுக்கு தக்க பாடம் புகட்டவும் பாஜக அரசை தூக்கிய எறியவும் அனைத்து விவசாய சங்கங்களுடன் ஒன்றிணைந்து அகில இந்திய விவசாய சங்கம் கூட்டுப் போராட்டம் நடத்துவது காலத்தின் கட்டாயம்'' என ராவுலு வெங்கையா எழுச்சி உரையாற்றினார்.

தெலுங்கானா மாநில அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவராக பாகம் ஹேமந்த ராவ், பைசா பத்மா செயலாளராகவும், நெட்டம் நாராயாணா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### அசாம்

**விலைவாசிக்கு எதிராக சிவன், பார்வதி வேடமிட்டு**

## நடிகர்-நடிகை தெருப் போராட்டம்

விலைவாசி உயர்வுக்குஎதிராக சிவன் பார்வதி வேடமிட்டு தெரு நாடகம் நடத்தி பொதுமக்களை திரட்டி போராட்டத்தில் ஈடுபட்ட நடிகர், நடிகை கைது செய்யப்பட்டு பின் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட செய்தி அசாம் மாநிலம் மட்டுமல்லாது நாடெங்கும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர் நடிகர் பிரின்சி போரா. இவரும், பரிஷ்மிதா தாஸ் என்ற சக நடிகையும் முறையே சிவன், பார்வதி வேடத்தில் அசாம் மாநிலம் நகான் நகரில் ஜூலை 9 ந்தேதி நகர் முழுவதும் வலம் வந்தனர்.

பொதுமக்கள் அதிகம் கூடும் காலேஜ் சவுக் என்ற பகுதியில் இவ்விரு கலைஞர்களும் தெரு நாடகம் நடத்தினர். அந்த நாடகத்தில், '' தாங்கள் வந்த இரு சக்கர வாகனத்தில் பெட்ரோல் தீர்ந்தது போல் தமக்குள் வாக்குவாதம் செய்து அந்த வாதத்தின் இடையே. நாட்டில் எரிபொருள் பெட்ரோல் டீசல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலை ஏறிவிட்டதாக வாதம் செய்து, கூடியிருந்த பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தனர் அவ்விரு நடிகக் கலைஞர்கள்.

முதலாளிகளின் நலனுக்காக மட்டுமே ஒன்றிய மாநில அரசுகள் செயல்படுகிறது. சாதாரண மக்கள் பற்றி கவலைப்பட வில்லை என விமர்சித்து வசனம் பேசினர். பின்னர் பார்வையாளர்களுடன் இணைந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

இதேபோன்று நகான் நகரின் இன்னொரு முக்கிய பகுதியான பஜார் பகுதிக்கும் சென்று தெரு நாடகம் நடத்தினர். இந்தப் போராட்டத்திற்கு பொது மக்களது ஆதரவு பெருகியது கண்டு அதிர்ச்சி அடைந்த மதவெறி அமைப்பான விஸ்வ இந்து பரிஷத், இந்த மக்கள் கலைஞர்கள் மீது பொய்புகார் கூறியது. அதாவது மக்கள் பிரச்சினை சொன்ன இந்த கலைஞர்களால் இந்துக்களின் உணர்வுகள் புண்படுவதாக புகார் அளித்தனர். அதன் பேரில் கைதான இவ்விரு கலைஞர்களுக்கு ஆதரவாக மக்கள் குரல் எழுப்பினர். மக்கள் ஆதரவோடு இந்த பொய் புகாருக்கு எதிராக மக்களது எதிர்ப்பை கண்ட காவல்துறை இவ்விரு கலைஞர்களை ஜாமீனில் விடுவித்துள்ளனர்.



தங்களது வருமானத்தை மட்டுமே கருத்திற்கொள்ளாது. மக்கள் பிரச்சினைக்காக வீதிக்கு வந்து மக்களோடு மக்களாக நின்று போராட்டம் செய்த இந்த இரு நடிக கலைஞர்களுக்கு நாடெங்கும் வரவேற்பும் ஆதரவும் பெருகிவருகிறது.


''பாஜக ஆளும் மாநிலங்களில் மதுக்கடைகளை மூட வேண்டும்'' என்று பாஜக பிரமுகர் உமாபாரதி போர்க்கொடி தூக்கியுள்ளார்.

போபால் பாஜக ஆளும் மாநிலங்கள் அனைத்திலும் மதுபானக் கடைகளை மூட வேண்டும் என பாஜக வின் முன்னாள் மத்திய அமைச்சர் உமாபாரதி திடீரென போர்க்கொடி எழுப்பியுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநில முன்னாள் முதல்வரும் பாஜகவின் மூத்த தலைவருமான உமா பாரதி, இந்த கோரிக்கையை வலியுறுத்தி மதுக்கடைகளையும் அவரே அடித்து நொறுக்கி வருகிறார். அந்த கட்சியின் தலைவர் நட்டா வுக்கு உமாபாரதி கடிதம் எழுதிஉள்ளார். அதில் மத்தியப் பிரதேசத்தில் மது விற்பனையை தடை செய்ய வேண்டும். மதுக்கடைகளை மூட வேண்டும். பெண்களையும் குடும்பங்களையும் காபாற்ற பாஜக ஆளும் அனைத்து மாநிலங்களிலும் ஒருங்கிணைந்த மதுக் கொள்கை உருவாக்க வேண்டும் மதுக் கொள்கையில் சமசரம் செய்துகொள்ள மாட்டேன் என்றெல்லாம் அவர் நட்டாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது. இது பாஜக கட்சியினரை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

## தோழர் சி.எஸ். கட்டிட நிதி

| | |
|---|---|
| தோழர் அஷ்ரப் அலி(திருப்பூர்) இல்லத் திருமணத்தில் | ரூ.5000 |
| தோழர் த.இந்திரஜித் (திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளர்) இல்ல திருமணத்தில்... | ரூ.5000 |
| குடந்தை ஆர்.கே.ரவீந்திரன்... | ரூ.200 |
| தோழர் ஆர்.மதுக்குமார், நகரச் செயலாளர், கெலமங்களம், கிருஷ்ணகிரி மாவட்டம்... | ரூ.1000 |
| எஸ்.கிங்கேஸ், கட்டிடத் தொழிலாளர் சங்கம் கெலமங்களம்... | ரூ.1000 |
| தேன்கனிக்கோட்டை இளைஞர் பெருமன்றம்... | ரூ.5000 |
| ஒசூர் தெருவோர வியாபாரிகள் சங்கம் – கணேசன்... | ரூ.500 |
| துரை சந்திரசேகர் (சேலம் மாவட்டம்)... | ரூ.10,000 |




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25–வது தமிழ் மாநில மாநாட்டு சிறப்பிதழ் ஜனசக்தியின் சார்பில் வெளிவர உள்ளது. 1925 டிசம்பர் 26ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம் முதல் 24வது மாநில மாநாடு வரை வரலாற்று விவர குறிப்புகள் படங்களுடன் சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. பொக்கிஷம் போல் பாதுகாத்து அவ்வப்போது படித்து பயன் பெறலாம்.**

### விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | - | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | - | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | - | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | - | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | - | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | - | 15,000 |
| உள்பக்கம் | கால்பக்கம் | கலர் | - | 7,500 |
| உள்பக்கம் | க/வெள்ளை | முழுப்பக்கம் | - | 20,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | அரைப்பக்கம் | - | 10,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | கால் பக்கம் | - | 5,000 |

**குறிப்பு: விளம்பரங்கள் ஜூலை 30–ம் தேதிக்குள் ஜனசக்தி முகவரிக்கு கிடைக்க வேண்டும். வங்கியில் பணம் செலுத்தியவர்கள் அதற்கான பதிவு செலானை பிரதி எடுத்து தபாலில் அல்லது ஸ்கேன் செய்து இ–மெயிலில் அனுப்ப வேண்டும்**

Janasakthi Trust
பணம் செலுத்தும் விபரம்
A/C. NO. 1083 0200 0009 999
IFC. NO. 0001083
Indian Overseas Bank
Mylapore Branch
Chennai - 600 004
புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்

புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்
விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
16/142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014,
செல்: 8220468816, 9444331138
இ.மெயில். info.janasakthi@gmail.com

## இந்த வார தம்பிக்குறள்

### 78. நூல் நன்னீர்க்குடம்

**ஊற்றிவைத்தநன்னீர்க்குடமெனலாம்நூலைவற்றா**
**ஊற்றெனலாம் மக்களது வாழ்வு.**

நூலறிவு என்பது ஒரு குடத்திலுள்ள நீருக்கு ஒப்பாகும். அதிலிருந்து நீர் எடுக்கக் குறையும். ஆனால், வற்றாத ஊற்றிலிருந்து எவ்வளவு நீர் எடுத்தாலும் குறையாது. நூலறிவு ஒரு அளவுதான் பயன்படும். மக்களது வாழ்விலிருந்து கிடைக்கும் அறிவு வற்றாதது. எடுக்க எடுக்க ஊறிக் கொண்டே இருக்கும்.

**இலக்கிய மீந்த திலக்கணம் எண்ணுங்கால்**
**இல்வாழ்வே ஈந்த ததை.**

இலக்கணம் என்பது இலக்கியத்தில் இருந்து வரையறுக்கப்படுவதாகும். (எள்ளில் இருந்து எடுபடும் எண்ணெய் போல், இலக்கியத்திலிருந்து எடுபடும். இலக்கணம் – நன்னூல்) இலக்கியம் எனப்படுவது இல்வாழ்வில் இருந்தே பெறப்படுகிறது.



# செங்கம் நகரில் அரசியல் விளக்க கூட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விளக்க பொதுக்கூட்டம் சர்தார் தலைமையில் நடைபெற்றது. மாதேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் வே.முத்தையன், ஆர். தங்கராஜ், த.ராசேந்திரன், வி.பச்சையப்பன், ராஜா, ஏழுமலை உள்ளிட்ட பலர் பேசினர். இதில் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். மு.முத்துக்குமரன் நன்றி கூறினார்.



## கலை இலக்கியப் பெருமன்றத்தின்

# சென்னை மணலி கிளை தொடக்க விழா!

தமிழ்நாடு கலை இலக் கியப் பெருமன்றத்தின் சென்னை மாவட்ட மணலி பகுதியில் புதிய கிளை தொடங்கப்பட்டது. பெருமன்றத்தின் மாநில பொதுச்செயலர் மருத்துவர் த.அறம் கிளையை தொடங்கி வைத்து பேசினார். வடசென்னை மாவட்டம் மணலியில் உள்ள சின்னசேக்காடு வள்ளலார் பேரவை அரங்கில் தொடக்க விழா நடந்தேறியது. பேராசிரியர் கவிஞர் யாழினி முனுசாமி வரவேற்றுப் பேசினார்.

பேராசிரியர் சற்குருநாதன் தலைமையில், சென்னை மாவட்ட செயலாளர் பேராசிரியர் இளங்கோ, இதழாளர் இசைக்கும்மணி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் ஸ்டாலின் பாரதி, சுபாஷ் பாரதி, தமிழேந்தி குமரன் உள்ளிட்டோர் உரை வீச்சுகளை வழங்கினர்.

நிகழ்வின் இடையே நடந்த கவியரங்கில் கவிஞர்கள் சக்திவேல், மகேசன், மேரி வசந்தி, யாழினி உள்ளிட்டவர்கள் கவிதைகளை வாசித்தனர். பெரு மன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம், கவிஞர் அமிர்தம் சூரியா, சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர் ச.சற்குருநாதன் தலைவ ராகவும், பேராசிரியர் கவிஞர் யாழினி முனுசாமி செயலாளராகவும், கவிஞர் மகேசன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

# நூறுநாள் வேலையை முறையாக வழங்குக

## விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் தாலுகா குழு சார்பில், ஈராட்சி பஞ்சாயத்தில் 100 நாள் வேலையை முறையாக அமல்படுத்த வலியுறுத்தியும், வேலை நாட்களை குறைக்கக் கூடாது என்று வலியுறுத்தியும், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு எஸ்.நல்லையா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் வி.கிருஷ்ணமூர்த்தி, ராமலட்சுமி, சுப்புராஜ், மாரியப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கொப்பரை கிலோவுக்கு ரூ.150 வழங்கக் கோரி

# தென்னை விவசாயிகள் போராட்டம்

கொப்பரை தேங்காய்க்கான கொள்முதல் விலையை 150 ரூபாயாக உயர்த்திட வேண்டும், மட்டை நீக்கிய தேங்காய்களை கிலோ 50 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய வேண்டும், தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் தேங்காய் எண்ணெய் பயன்படுத்திட ஆணை பிறப்பிக்க வேண்டும், பாமாயில் எண்ணெய் இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டும், அனைத்து ரேஷன் கடைகளிலும் பாமாயிலுக்கு பதிலாக தேங்காய் எண்ணெயை வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**கீரமங்கலம்:** புதுக்கோட்டை மாவட்டம்,கீரமங்கலம் சிவன் கோயிலில் இருந்து தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கத்தை சேர்ந்தவர்கள் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக வந்து கீரமங்கலம் பேருந்து நிலையம் எதிரே ஒன்றிய, மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டதோடு தேங்காய்களை சாலையில் உடைத்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி ஒப்பாரி வைத்து நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுக்கோட்டை மாவட்ட



செயலாளர் த.செங்கோடன், முன்னாள் மாவட்ட செயலாளர் மு.மாதவன் உள்ளிட்ட நிர்வாகிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவள்ளுவர் சிலை முன்பு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் தேங்காய் உடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஜி.சந்தனம் தலைமை வகித்தார். தென்னை விவசாயிகள் சங்க மதுரை மாவட்ட அமைப்பாளர் இரவிவர்மா, விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் தவமணி முன்னிலை வகித்தனர். இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

## மதுரை காமராஜர் பல்கலைக்கழக

# பட்டமளிப்பு விழாவில் நெறிமுறைகள் மீறல்

## மாணவர் பெருமன்றம் கண்டனம்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் சீ.தினேஷ், மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஜூலை 13 அன்று பட்டமளிப்பு விழா நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்த தகவல் உயர் கல்வித் துறைக்கும்,துறை அமைச்சருக்கும் கூட தெரியப்படுத்தாமல் இருப்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை அவமதிக்கும் செயல் மட்டுமல்லாது கல்வி துறையின் மாநில உரிமையை பறிக்கும் நடவடிக்கையாகவே பார்க்க முடிகிறது. மேலும் விழாவில் பாஜகவைச் சேர்ந்த ஒன்றிய இணை அமைச்சரை சிறப்பு விருந்தினராக அழைத்து இருப்பது கல்வி துறையை காவி துறையாக மாற்றும் முயற்சியில் ஒன்றிய அரசும் அதன் பிரச்சார கருவியான ஆளுநரும் ஈடுபட்டிருப்பதை காட்டுகிறது.

மேலும் இந்த நிகழ்ச்சி குறித்த அனைத்து ஏற்பாடுகளும் ஆளுநர் மாளிகை தான் முடிவெடுத்தது என்று உயர் கல்வித் துறை அமைச்சரிடம், துணைவேந்தர் சொல்லி இருப்பது ஆளுநரின் சர்வாதிகாச போக்கை காட்டுகிறது. இவ்வாறு நெறிமுறைகளைப் பின்பற்றாது தன்னிச்சையாக செயல்படும் ஆளுநரின் நடவடிக்கை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது. மேலும் இவ்வாறான செயல்பாடுகள் காவி சித்தாந்தத்தை கல்வி துறையில் திணிப்பதற்கான முயற்சியாகவே பார்க்க முடிகிறது.

ஆளுநரின் இது போன்ற தன்னிச்சையான நடவடிக்கையை அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநில குழு வன்மையாக கண்டிக்கிறது. மேலும் தமிழ்நாடு அரசு, நெறிமுறைகள் மீறப்பட்டு நடத்தப்பட்ட பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா குறித்து விசாரணை நடத்தி விதிமுறை மீறியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநில குழு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

## சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து

# மாதர் தேசிய சம்மேளனம் ஆர்ப்பாட்டம்




சமையல் எரிவாயு விலையை தொடர்ந்து உயர்த்தி வரும் ஒன்றிய மோடி அரசை கண்டித்தும், விலை உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தியும் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**ஸ்ரீவில்லிபுத்தூர்:** விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பாண்டிச்செல்வி தலைமை வகித்தார். வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணிபெரியசாமி முன்னிலை வகித்தார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி ஆகியோர் பேசினர்.

**விருதுநகர் :** விருதுநகர் பேருந்து நிலையம் அருகில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில், நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் பி.மாரீஸ்வரி தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் பழனியம்மாள் முன்னிலை வகித்தார். சிபிஐ எஸ்.பழனிக்குமார், வி.பாலமுருகன், எம்.முருகேசன் ஆகியோர் பேசினர் . மாதர் சங்க ஒன்றிய நிர்வாகிகள் சிவசக்தி, ரெஜினாமேரி, லட்சுமி, தங்கம் மற்றும் சிபிஐ சார்பில் ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை :** இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மயிலாடுதுறை மாவட்டக் குழு சார்பில் மயிலாடுதுறை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை பி.தேவகி தலைமை தாங்கினார். கே.வித்யா தேவி, இ.வசந்தமாலை, டி.தமிழ்ச்செல்வி, ஒய்.எஸ்.பாத்திமா பீவி. ஆர்.இந்திராகாந்தி, ஏ.அஞ்சம்மாள், ஏ.எஸ். ஜீவமணி, பி. ஜான்சி ராணி, எஸ்.சசிகலா, அபிராமி, ஷிலா ஜவஹர் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். சிபிஐ மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன் கண்டன உரை ஆற்றினார்.

**சிவகிரி:** ஈரோடு மாவட்டம், சிவகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கொடுமுடி ஒன்றியசெயலாளர் செல்விரணதிவே தலமை தாங்கினார்.

இந்தியமாதர் தேசிய சம்மேளன நிர்வாகிகள் ச.தேவி, சரஸ்வதி, மீனாட்சி, தமிழ்கொடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவுத்தொழிலாளர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் மு.வரதராஜன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கதலைவர் சி.ஆறுமுகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியசெயலாளர் ஆர்.ரணதிவே, இந்திய மாதர் தேசிய சம்மேளன தலைவர் பிரேமா மணிவண்ணன், பாலதண்டாயுதம், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் ராமசாமி உட்பட பலர் பேசினர். கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் வி.சண்முகம் நன்றி கூறினார்.

**அமினா புகுந்த வீடும், ஆர்.எஸ்.எஸ். புகுந்த நாடும் அறவே உருப்படாது!**

### விபத்தில் மரணமடைந்த இராமேஸ்வரம்

# மீனவர் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்குக!

## ஏ.ஐ.டி.யூ.சி. வலியுறுத்தல்!

தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இராமநாதபுரத்தில் தமிழ்நாடு ஏஐடியூசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வேன் மூலம் திரும்பிய அன்வர்அலி, முகைதீன்அப்துல்காதர், ரசீப் அலி, சேது ஆகிய நான்கு மீனவர்கள் சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தோம். உயிரிழந்த மீனவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்த தொழிலாளர்கள் விரைவில் நலமடைய விழைகிறோம்.

கடல் அட்டை பிடிப்பதற்கான தடை தங்கள் வாழ்வாதாரத்தை அழித்து வருகிறது, அத்தடையை நீக்க வேண்டும் என்று கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருவதன் ஒரு பகுதியாக 22 மீனவ கிராம பொதுமக்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய போது தான் இந்த கோர விபத்து நிகழ்ந்து உள்ளது.

உலகத்தில் எந்த ஒரு நாடும் கடல் அட்டை பிடிப்பதற்கு தடை விதிக்கவில்லை. இந்தியா மட்டும் தான் மருத்துவ குணம் கொண்ட மீன்வகைகளில் ஒன்று எனக் கூறி கடல் அட்டையை அரிய கடல்வாழ் உயிரினங்கள் பட்டியலில் சேர்த்து, தடை விதித்து உள்ளது.

ஒரு பெண் கடல் அட்டை ஆண்டிற்கு இரண்டு முறை 10 லட்சம் குஞ்சுகள் வீதம் 20 லட்சம் குஞ்சுகளை பொறிக்கின்ற வல்லமை கொண்டது; அதனால் கடல் அட்டை அழியக்கூடிய அரிய உயிரினம் இல்லை, இந்த உயிரினம் அழிந்து விடும் எனச் சொல்வது ஆதாரம் அற்றது, தடையும் தேவையற்றது என்று ஜெனிவாவில் உள்ள சர்வதேச கடல் வாழ் ஆய்வு மையம் தெரிவிக்கிறது. மேலும் இந்தியாவை சுற்றி இருக்கின்ற இலங்கை, வங்காளம், பாகிஸ்தான் நாட்டு மீனவர்கள் கடல் அட்டையை சேகரிக்கிறபோது இந்திய நாட்டு மீனவர்களுக்கு மட்டும் தடை விதிப்பது. மீனவர்களை கடற்கரையிலிருந்து அப்புறப் படுத்தும் செயலாகும்.

கடல் அட்டைகளைப் பிடிப்பதற்கு என தனியாக எந்த வலையும் கிடையாது. மீன் வலையில் இவை தானாகவே சிக்கிவிடும். வலையில் ஏறிய மறுகணமே இந்த அட்டைகளும் இறந்துவிடும். அவ்வாறு தவறுதலாக வலையில் சிக்கிக்கொள்ளும் கடல் அட்டைகளை, மீன்களுடன் கரைக்கு கொண்டு வந்தால்கூட மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதும், ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.25 ஆயிரம் அபராதமும் விதிப்பதும் நடைமுறையில் உள்ளது.

கடல் அட்டைகளை வேண்டுமென்றே பிடித்தார்கள் என கடந்த 20 ஆண்டுகளில் ராமநாதபுரம், நாகை, தூத்துக்குடி மாவட்டங்களில் இதுவரை 600க்கும் மேற்பட்ட அப்பாவி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரும், ஒன்றிய அரசும் தமிழக மீனவர்களை பயங்கரவாதிகள் போன்று கையாள்கின்றனர். இதனால் கடல்அட்டை பிடிக்கும் மீனவர்கள் வருமானம் ஈட்ட அண்டை மாநிலங்களை நோக்கி பஞ்சம் பிழைக்க சென்று விடுகிற அவலமும் ஏற்பட்டு வருகிறது.

இத்தகைய நிலையில் மீனவர்கள் கடல் அட்டை சேகரிக்க விதிக்கப் பட்டிருக்கும் தடையை நீக்கக் கோரி தமிழ்நாடு ஏஐடியூசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று திரும்பும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. மீனவர்களின் வாழ்வுரிமையை பறித்து போராட வேண்டிய நிலைக்கு தள்ளிப்பட்டதாலேயே நான்கு மீனவர்களின் உயிர் பறிக்கப்பட்டு, அவர்களை நம்பியிருந்த குடும்பம் நிர்க்கதியாக நிற்கிறது.

எனவே ஒன்றிய அரசு கடல் அட்டை மீதான தடையை நீக்க வேண்டும். தமிழ்நாடு அரசு அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்த மீனவர் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா பத்து லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். அத்துடன் உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க வேண்டும் காயமடைந்த தொழிலாளர்களுக்கு தக்க சிகிச்சையும், உரிய இழப்பீடும் வழங்க வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# சேலம் பெத்தநாயக்கன் பாளைய தியாகிகள் தினம்

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கிடைக்க காரணமாய் இருந்த மாநிலம் தழுவிய விவசாயிகள் போராட்டத்தில் 1972ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் தேதி மாட்டுவண்டி முற்றுகை போராட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற முற்றுகை போராட்டத்தை கலைக்க காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தியது. இதில் சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தை சேர்ந்த எட்டு பேரும் நரசிங்கபுரத்தை சேர்ந்த ஒருவரும் சுட்டு கொல்லப்பட்டனர். இந்த வீரதியாகிகளுக்கு அஞ்சலி நிகழ்ச்சி ஜூலை 5 அன்று இரு இடங்களிலும் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கட்சியின் மாவட்டசெயலாளர் ஏ.மோகன்இ காங்கிரஸ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.பழனிமுத்து, இந்திய கம்யுனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.ராமன், எஸ்.பாலன், டி.கண்ணன், என்.எம்.சடையன், டி.வி.கருணைதாஸ், எம்.பாலன், எஸ்.முருகன், கவிதா செல்லப்பன், ஈ. ஆர்.கே., பா.தினேஷ் மற்றும் என்.ராக்கேஷ் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### தொ.மு.ச. தேசிய இணை பொதுச் செயலாளர்

# மா.பேச்சிமுத்து மறைவு

## ஏஐடியூசி இரங்கல்



தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் தேசிய இணை பொதுச் செயலாளர் மா.பேச்சிமுத்து அவர்கள் ஜூலை 5 அன்று காலமானார் என்பதை தெரிவிக்க வருந்துகிறோம்.

தமிழ்நாடுநுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளரான அவர், தான் பணிபுரிந்த துறையில் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையைக் கட்டி வளர்த்தார். அந்தச் சங்கத்தின் தலைவராகவும், ஆவின் தொமுச தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் அவர் பணிபுரிந்தார். இந்திய அரசின் தொழிலாளர் துறை நடத்தும் தொழிலாளர் உயர் கல்வி நிறுவனமான விவி கிரி தேசிய தொழிலாளர் கழகத்தின் ஆட்சிக் குழுவில் தொமுச தரப்பில் உறுப்பினராக பணிபுரிந்து இருக்கிறார்.

ஐஎல்ஓ உச்சி மாநாடு ஜெனிவாவில் நடந்தபோது, இந்திய அரசின் பிரதிநிதியாக தொமுச சார்பில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பி வைக்கப்பட்டார்.

தொழிலாளர் குறித்த சட்டங்கள், வழக்குகள், விதிமுறைகள் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றுக் கொள்வதில் பெரும் அக்கறை காட்டியவர். தன்னோடு மட்டுமின்றி தன்னை சுற்றியுள்ள அனைவருமே இவற்றை கற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புபவர்.

ஒன்றிய அரசு கொண்டு வந்த நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளை ஆய்வு செய்து, தொழிலாளர்களுக்கு பாதகமான அம்சங்களைப் பிரித்தெடுத்து, தொழிலாளர்களுக்கு கொண்டு செல்வதில் அண்மைக்காலத்தில் பெரும் பங்களிப்பு செய்தவர்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு நடந்து கொண்டிருந்த போதிலும் கூட, இந்தச் சட்டத் தொகுப்புகளுக்கு தமிழ்நாடு அரசு விதிகளை வகுக்கும்போது, அந்த விதிகளில் தொழிலாளர்களுக்கு எதிரான அம்சங்கள் இடம் பெற்று விடக்கூடாது என்பதற்காக பகிரங்கமாக வாதாடியவர்.

அவரது மறைவு தொமுச பேரவைக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டு தொழிற்சங்க இயக்கத்திற்கும் ஒரு பெரும் இழப்பாகும்.

அவரது மறைவுக்கு தமிழ்நாடு ஏஐடியூசி நெஞ்சார்ந்த அஞ்சலி செலுத்துகிறோம்.

அவரது குடும்பத்தினருக்கும், தொ.மு.ச. தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### கொள்ளிடத்தில் மாட்டுவண்டியில்

# மணல் எடுக்க அனுமதி வழங்க வேண்டும்

## தா.பழூர் சிபிஐ ஒன்றியக்குழு கோரிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தா.பழூர் ஒன்றியக்குழு கூட்டம், தா.பழூர் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. என்.அன்பழகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மூத்த தோழர் இரா.உலகநாதன், மற்றும் மாவட்ட செயலாளர் சோ.இராமநாதன், ஒன்றிய செயலாளர் ஜி.சக்கரவர்த்தி, துணைச்செயலாளர் சோ.தேவசகாயம், மாவட்டக்குழு உறுப்பினர் பி.ஆணைமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தா.பழூர் ஒன்றியத்தில் அரசு இலவசவீடு மற்றும் தனியார் வீடு கட்டுவதற்கு மணல் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றார்கள். நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிக்காரர்கள் வருமானமில்லாமல் மாட்டுக்கு தீவணம் வாங்க கூட பணம் இல்லாமல் திண்டாடி வருகின்றனர். எனவே தமிழக அரசு ஏழைகள் அரசு வீடு கட்டவும், தனியார் வீடுகட்டவும், கொள்ளிடம் ஆற்றில் இருந்து மணல் எடுக்க தஞ்சை மாவட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளதை போல், அரியலூர் மாவட்டத்திற்கும் அனுமதி அளிக்க வேண்டும்.

நவீன அரிசி ஆலையை தா.பழூர் ஒன்றியத்தில் அரசே அமைக்க வேண்டும்.

மின்வெட்டு காரணமாக பயிர்கள் கருகும் நிலையில் உள்ளது. எனவே மும்முனை மின்சாரம் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு தேவையான யூரியா, உரம் தட்டுபாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தில், அங்கராயநல்லூர், கோடங்குடி, காரைக்குறிச்சி, உள்ளிட்ட பலகிராமங்களில் இரவு பகலாக ஏரி, குளங்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக ஆழத்தில் ராட்சத இயந்திரங்கள் மூலம் மண் வெட்டி எடுத்து தஞ்சை மாவட்டத்தில் போடப்படும் நான்குவழிச்சலைக்கு குஜராத் மாநிலத்தை சேர்ந்த படேல் நிறுவனம் டாரஸ் லாரி மூலம் எடுத்து செல்கிறது. விவசாயிகள் வண்டல் மண் எடுத்து கொள்ள மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. எனவே விவசாயிகள் வண்டல் மண் அள்ள மாவட்ட ஆட்சியர் அனுமதி அளிக்க வேண்டும்.

# மாற்றுக் கட்சியினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்

ஜெயங்கொண்டம் கங்கைகொண்ட சோழபுரம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளைக் கூட்டம் ராஜாராம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பொன்னேரி வடிகால் வாய்க்காலை வளவனேரிவரை தூர் வாரவேண்டும். நெ1.பாசன வாய்கால் தூர்வார வேண்டும். சட்டமன் உறுப்பினர்மேம்பாட்டு நிதியில் ரேஷன் கடை, சொந்தகட்டிடம், சமுதாய கூடம் வேண்டும்.அனைத்து பேருந்துகளும் கங்கைகொண்டசோழபுரத்தில் நின்று செல்ல வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்செயலாளர் இராமநாதன், ஒன்றியச் செயலாளர் ராஜா பெரியசாமி, கோவிந்தராஜ், சிவ.கருணாநிதி, நாகராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

அப்போது மாற்றுக் கட்சியில் இருந்து விலகி அன்பழகன், ஜயப்பன் ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். ஆனந்தன் நன்றி கூறினார்.



# சிட்லப்பாக்கம் பகுதியில் வசிப்போரை அகற்றுவது நிறுத்தம்

சிட்லபாக்கம் பகுதியில் கிட்டத்தட்ட 60ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் மக்களை ஆக்கிரமிப்பு என்று கூறி அகற்ற புல்டோசருடன் வந்த அதிகாரிகளை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், தென்சென்னை மாவட்ட செயலாளர் எஸ். ஏழுமலை ஆகியோர் நேரில் வந்து அதிகாரிகளை எச்சரித்து, இந்த நிலை தொடர்ந்தால் தமிழக அரசிற்கு மிகப்பெரிய கெட்ட பெயர் தான் கிடைக்கும் என்பதையும் கூறி, மீறி இடிக்க வந்தால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்றும் எச்சரிக்கை விடுத்தனர்.

சுதந்திர போராட்ட தியாகி இரா.நல்லகண்ணு அவர்களும் இதே கோரிக்கையை முன்வைத்தார். ஆக்கிரமிப்பு என்று அகற்ற வந்தவர்களை தடுத்து நிறுத்தும் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளை சார்பாக தாமரை செந்தில்குமார், வை. வி.வெங்கட், வேலு, அருள் ஆகியோர் ஒருங்கிணைத்து கலந்து கொண்டனர்.

## பசுந்தோல் போர்த்திய புலியாக பா.ஜ.க.வை தோலுரித்துக் காட்டுவோம்

## சூடு

ஒரு சமூகம் நோய் பிடித்து உறைந்து கிடைக்கிற போது,அதை உயிர்ப்பிப்பதற்கு சூடு தேவைப்படுகிறது. சூடுதான் உயிர்ப்பின் அடையாளம். குளிர்ந்து விரைத்து கிடக்கிற இந்திய சமூகத்தை ஒரு" சூடு" போட்டு எழுப்ப முயற்சித்திருக்கிறார் ஆரூர் புதியவன். சூடு என்னும் இந்தக் கவிதை நூலில், கவிதையின் இன்பம் அலாதியானது, அந்த இன்பத்தை வாசகன் மனதில் தோற்றுவிப்பது என்பது ஒவ்வொரு கவிஞருக்கும் மிகப்பெரிய சவால். அது காட்சியிலோ, பொருளிலோ,மொழியிலோ அல்லது மூன்றும் பிரித்தறிய வண்ணம் ஒன்றிலொன்று பின்னி இருக்கும்படியான நுட்பத்திலோ என்பதில் கவிதையின் சூட்சமும் உட்பொதிந்து கிடக்கிறது . எனவே வாசகனுக்கு அலாதியான இன்பத்தை ஆரூர் புதியவன் கவிதைகள் நமக்கு தருகிறது.




"சுவாசம் சுதந்திரத்தை வாங்க போனது. இன்றோ சுந்தரத்திற்கு ஜீவ சுவாசம் போனது". சுதந்திரக் காற்றை நம்மால் சுதந்திரமாக சுவாசிக்க முடியாத கொடுமை நாட்டில் அரங்கேறுகிறது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். "அணியணியாய் விலை கொடுத்த தியாக கேள்விகள் பிறகு அநியாயம் ஆட்சியேற அனைத்தும் தோல்விகள்". தியாகங்கள் தோல்வியுறுமா ?. காட்டிக் கொடுத்தவர்கள் அரியணை ஏறினால் தியாகங்கள் தோல்வியடைந்ததாக தானே அர்த்தம்?. அதுதானே இந்திய அரசியலில் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

"தண்ணீரை கேட்டோர்க்குக் கண்ணீரைத் தந்தான். தமிழகத்து விவசாயி வறுமையிலே வெந்தான்" தமிழகத்து உரிமையான காவிரி நீரை உச்ச நீதிமன்றம் சொல்லி கூட கர்நாடகம் தர மறுக்கிறது. இதற்கு ஒன்றிய அரசு ஒத்துக் ஊதுகிறது. இதனால் தமிழக விவசாயிகள் படுகிற அல்லலை சொல்லி சவுக்கடி கொடுக்கிறார். "இனி நரிகளின் ஆட்டம் முடிந்துவிடும். இனிய நெறிகளின் தேசம் விடிந்துவிடும் " நமது இனிய தேசத்தில் மக்களைப் பிரித்தாளும் நரிகளின் ஆட்சியே தொடருமா?. நிச்சயமாக இல்லை நமது தேசம் விரைவில் விடிந்து விடும் என்கிற நம்பிக்கை கீற்றை வெளிச்சமாக பாய்ச்சுகிறார் ஆரூர் புதியவன். சில மரக்கட்டைகளுக்கு சூட்டால் உணர்வு கொடுத்திருக்கிறார் . சுரணை உள்ளவர்கள் சூடு பட்டவுடன் எழத்தானே வேண்டும். இவ்வாறு பலரையும் எழுப்பப் முயன்றிருக்கிறார் . தேசம் விடியும் என்கிற நம்பிக்கையுடன் அனைவரும் எழுவோம். 'சூடு" கவிதை அல்ல! உணர்வு!!. அனைவரும் ஆரூர் புதியவன் எழுதிய சூடு கவிதை நூலை வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **– இன்சுவை பாரதி**

**ஆசிரியர் : ஆரூர் புதியவன்**
**வெளியீடு : தமிழ் அலை, 80/24 பி, பார்த்தசாரதிபேட்டை தெரு, தேனாம்பேட்டை, சென்னை–86 தொடர்புக்கு: 9486838801**
**பக்கங்கள் : 224 விலை: ரூ.225**

# நூல் நயம்

## அன்பே அமிழ்தம் சிறுகதைச் சரம்

இன்றைய சமூகத்தில் வெறுப்பும்,பகை உணர்ச்சியும், கோப தாபங்களும் பரவிக்கிடக்கிறது, இவற்றிலிருந்து சமூகத்தை நல்வழிப்படுத்துவது எப்படி?. இந்த சமூக நோய்க்கு என்ன மருந்து என்கிற சிந்தனையின் விளைவே, அன்பே அமிழ்தம் என்கிற இந்த நூல். அன்புதான் மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்பதை இந்த நூல் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பார்கள். அதற்கிணங்க வயதான பெற்றோர்களை பிள்ளைகள் பாதுகாக்க வேண்டும், அன்பு செலுத்த வேண்டும். பெற்றோரின் முதுமையில் அவர்களுக்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டும், உதாசீனப் படுத்த கூடாது என்பதை தான் இந்த முதல் கதை எடுத்து சொல்கிறது. தந்தையை அரவணைக்கும் தனயன் சிறப்பு . ஆனால் இரண்டாவது கதையில் நோயாளியான தனது தாய் அழுக்காக இருக்கிறாள் என கோபிக்கும் மகனை பேசுபொருளாக படைத்திருக்கிறார். நோய்வாய்ப்பட்டு இருக்கும் தாயை பராமரிக்காமல் போகும் மகன்களால் தாயின் மனநிலை கூட பாதிக்கப்படும் என்பதை இந்த "அழுக்குத் தாய்" கதையில் குறிப்பிட்டிருக்கிறார். பணம் இருந்து என்ன? தாயை பராமரிக்கும் மனம் இல்லாத இடத்தில் பணம் கூட "பாழ்தான் " என்பதை விளக்கி இருக்கிறார்.




'அச்சம் தவிர்' என்றால் அவ்வைப்பாட்டி பாட்டி. ஊரை சுத்தம் செய்யும் துப்புரவு தொழிலாளர்களை இந்த சமூகம் குப்பையை போலவே மதிக்கிறது. அவர்களுக்கும் உயிர் இருக்கிறது , அவர்களுக்கும் உணர்ச்சி இருக்கிறது என்பதை இந்த உணர்ச்சியற்ற ஜட கூட்டம் நினைக்க மறுக்கிறது. இதன் விளைவுதான் துப்புரவு தொழிலாளர்களை ஒருமையில் பேசுவது, அதிகார தோரணையில் மிரட்டுவதாக உள்ளது. தங்களது உரிமைகளுக்காக துப்புரவு தொழிலாளர்கள் இது போன்றவர்களை வீரத்தோடு எதிர்கொள்ள வேண்டும் என்பதைத்தான் 'வீராங்கனை' என்கிற இந்த கதை குறிப்பிடுகிறது.

மற்றொரு கதையில் பெண்களை வக்கிரபுத்தியோடு நோட்டம் விடுபவர்களை பெண்கள் எவ்வாறு அணுகவேண்டும் என்பதை "தன்மானம் "என்கிற கதையில்' என் உயிரை விட பெருசு தன்மானம். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவாள் இந்த 'கலையரசி' என்று தனது பெண் கதாபாத்திரத்தை பேசவைத்து பெண்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுகிறார் நூலாசிரியர்.

மொத்தத்தில் சமூகத்திற்கு தேவையான கருத்துக்களை, அன்பை அடிப்படையாக வைத்து அன்பே அமிழ்தம் என்கிற இந்த சிறுகதைச் சரத்தை தொடுத்திருக்கிறார் எழுத்தாளர் ஞா. சிவகாமி. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **– சமரன்**

**நூலாசிரியர் : ஞா. சிவகாமி**
**வெளியீடு : முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40, தொடர்புக்கு: 9840358301**

**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: **அருண் அசோகன்**

சுழலும் உலகம்

## நேட்டோ உச்சி மாநாட்டிற்கு எதிராக

# ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம்




நேட்டோ உச்சி மாநாடு ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகரில் ஜூன் 28–30 வரை நடைபெற்றது. முன்னதாக, ஜூன் 26 அன்று ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்கள் "நேட்டோ வேண்டாம்" என்றும், உக்ரைனில் நடைபெறும் போருக்கு எதிராகவும் ஆவேச முழக்கமிட்டு மாபெரும் போராட்ட ஆர்ப்பாட்டத்தை மேட்ரிட் நகர வீதிகளில் நடத்தினார்கள்.

ஸ்பெயின் நாட்டில் தற்போது சமூக ஜனநாயக கூட்டணியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. நேட்டோ உச்சி மாநாட்டிற்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் தற்காலிகமாக முடக்கப்பட்டன. ஸ்பெயின் நாட்டு மக்கள் அண்மை காலத்தில் பார்த்திராத அளவிற்கு மேட்ரிட் நகரில் போலீஸ் படை குவிக்கப்பட்டது. உழைக்கும் மக்களை ஒடுக்கும் சமூக ஜனநாயக கூட்டணி அரசாங்கம் நேட்டோவின் பக்கம் சாய்ந்துள்ளது என்றும், ஒரு பெரும் போர் மூளும் பட்சத்தில் ஸ்பெயினுக்கு பெரும் அபாயம் ஏற்படும் நிலை இருப்பதாகப் போராட்டத்தில் பங்கேற்றோர் கூறினர்.

# உலக அளவில் 3.6 கோடி குழந்தைகள் இடம் பெயர்வு

**யுனிசெப் அதிர்ச்சி தகவல்**

முதலாளித்துவ அமைப்பு, அரசு மேலாதிக்க அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சாதிய, மதவாத, இனவாத மோதல்களை, வன்முறை வெறியாட்டங்களை உருவாக்குகிறது. இதுபோன்ற வன்முறையின் கொடிய விளைவுகள் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மீது ஏற்படுத்தும் மோசமான தாக்கங்களை முதலாளித்துவ நாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் அதிகாரவெறி எனும் பேராசைக்கு கட்டுண்டு கிடப்பவர்கள் ஆவர். வன்முறைகளால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகி வருவது உழைக்கும் வர்க்கப் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது கவனத்திற்கு உரிய விஷயமாகும்.

போர் மற்றும் வன்முறை சம்பவங்கள் காரணமாக உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 2.28 கோடி ஆகும். கடந்த 2021ஆம் ஆண்டின் முடிவில் பல்வேறு நெருக்கடிகள், மோதல்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக உலக அளவில் 3.65 கோடி குழந்தைகள் இடம் பெயர்ந்துள்ளதாக யுனிசெப் அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப்பின், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, மிக அதிக எண்ணிக்கையில் குழந்தைகளின் இடப்பெயர்வு நிகழ்ந்திருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும் இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை 22 லட்சம் அதிகரித்தது. மேலும், இடம் பெயர்ந்த குழந்தைகளில் 1.37 கோடி பேர் அகதிகளாவர்.

ரஷ்யா – உக்ரைன் போர் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் உள்பட 2022ஆம் ஆண்டில் போர், வன்முறை, பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல், பேரிடர்கள் ஆகியவை காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் பற்றி இந்த அமைப்பு தயாரித்த அறிக்கையில் தகவல்கள் சேர்க் கப்படவில்லை. அந்தத் தகவலையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

பருவநிலை மாற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகள், ஆப்கானிஸ்தான், காங்கோ, ஏமென் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினை உள்ளிட்டவை இடம் பெயர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாக அமைந்து விட்டது.

"இடம் பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இவற்றை அரசுகள் தடுக்க வேண்டும். இடம் பெயர்ந்த குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் இதர சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அகதிகளாக வந்த 50 சதவீதத்தினர் மட்டுமே ஆரம்ப பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இளம் வயது சிறுவர்களில் நான்கில் ஒரு பங்கிற்கும் குறைவானவர்களே பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பெற்றோரை விட்டுப் பிரிந்து தனியாக இருக்கும் குழந்தைகள் கடத்தப்பட்டு சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தப்படும் சூழல் அதிகம் உள்ளது.

உலக அளவில், கடத்தப்படுபவர்களில் 28 சதவீதத்தினர் குழந்தைகள் ஆவர். எனவே, குழந் தைகளை பாதுகாக்க வேண்டும்" என்று யுனிசெப் இயக் குனர் கேத்தரின் ரசல் கூறியுள்ளார்.

# உக்ரைனில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தடை!




8–வது நிர்வாக முறையீட்டு நீதிமன்றம் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் மீது நிரந்தரமாகத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்வது குறித்து 8–வது நிர்வாக முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் அமர்வு ஜூலை 5 அன்று முடிவு செய்தது. நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ள அறிக்கையில் இது குறித்த விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

"உக்ரைன் நாட்டின் நீதித்துறை அமைச்சகத்தின் கருத்துகள் திருப்தி அளிப்பவையாக இருப்பதால், உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகள் தடை செய்யப்படுகின்றன. கட்சியின் சொத்துக்கள் மற்றும் நிதி உள்ளிட்ட அனைத்தும் உக்ரைன் அரசின் முழு கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உக்ரைன் ஆட்சியாளர்களால் உக்ரைன் சோசலிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல இடதுசாரி கட்சிகள் தடை செய்யப்பட்டுள்ளன. அந்த வரிசையில் தற்போது கம்யூனிஸ்ட் கட்சியும் தடை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு உக்ரைனில் போர்க் குற்றங்கள் மற்றும் வன்கொடுமைக் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள வலதுசாரி அமைப்புகள் மீது இதுபோன்ற நடவடிக்கைகள் எதுவும் இதுவரையில் மேற்கொள் ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரஷ்ய ஆதரவு நிலைப்பாடு கொண்டவையாகக் கருதப்படும் அனைத்து அரசியல் கட்சிகளும் தடை செய்யப்படும் என்ற ஆணையில் மே மாதம் 14ஆம் நாள் அதிபர் செலன்ஸ்கி கையெழுத்திட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கதாகும்.



# இளையராஜாவும் ஒன்றிய அரசும்!

–மு.வீரபாண்டியன்




**தமிழ் திரை உலகில் இசை விற்பன்னர் இளையராஜா. அவருக்கு ஒன்றிய அரசு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கி உள்ளது.**

பிரிட்டிஷ் தனது நாட்டிலும், தான் காலனி செய்த நாடுகளிலும், தனது நாடாளுமன்றங்களில் இப்படி, கலை, இலக்கியம், விளையாட்டு துறைகளில் திறன் மிக்கவர்களை கௌரவிப்பதற்காக இத்தகைய நியமன முறையைத் தோற்றுவித்தது. அது இன்னமும் தொடர்கிறது.

எனவே, இது வழக்கமான, இயல்பான ஒன்று என கடந்து செல்ல முடியுமா? முடியாது! ஏனெனில் ஒன்றிய அரசு தனது ஒவ்வொரு அசைவிலும் தனக்கான அரசியலை முன்னெடுக்கிறது. சூழ்ச்சிகள் இல்லாமல், உள்நோக்கம் இல்லாமல் அது வெளிப்படை அரசியலை முன்னெடுப்பது இல்லை.

ஒருபுறம் இசைக்கான கௌரவம் என இளையராஜாவுக்கான பதவியைக் கூறும் பாஜக ஒன்றிய அரசு, மறுபுறம் மாபெரும் எழுத்தாளர்களை, ஓவியர்களை, கல்வியாளர்களை, வரலாற்று ஆய்வாளர்களை சிறையில் அடைத்துள்ளது. இதன் முரண் புரிகிறதா? உள்நோக்கம் எனும் பொருள் இதுதான்!

இங்கு இளையராஜாவுக்கான விருதோ, கௌரவமோ அல்ல பிரச்சனை. பாஜகவின் அரசியலும், அதன் நோக்கங்களும் தான் பிரச்சனை.

உள்துறை அமைச்சர் கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா போன்ற தென் மாநிலங்கள் தங்கள் இலக்கு என பகிரங்கப்படுத்துகிறார். இந்த நான்கு மாநிலங்களுக்கு தான் விருதை அறிவிக்கிறது ஒன்றிய அரசு.

டாக்டர் அம்பேத்கர் அவர்களோடு – மோடியை ஒப்பீடு செய்து புகழ்கிறார் இளையராஜா. அவருக்குத்தான் மாநிலங் களவை உறுப்பினர் பதவியை வழங்கியது ஒன்றிய அரசு.

மறுபுறம் தனது கருத்துக்கு உடன்படாத, தனக்கு இசைவாகச் செயல்படாத மகத்தான கலைஞர்களை அது அலட்சியப்படுத்துகிறது.

இளையராஜாவுக்கு இசைக்கான மரியாதை– கௌரவம் என்றால் இன்னமும் விருதுகள், பதவிகள் கிடைக்கட்டும். ஏனெனில் தமிழ்த் திரையிசையில் புதிய முயற்சிகளை மேற் கொண்டவர் இளையராஜா.

கிராமப்புற இசைகளை உலகறிய செய்ததில் அவருக்கு மிக முக்கிய பங்கு உண்டு.

ராகங்கள் பதினாறு, சுரங்கள் ஏழு என்பார்கள். இளை யராஜா இதற்குள்ளும் புதிய வடிவங்களைத் தேடினார். அவரின் இசை கற்பனை அலாதியானது.

“பூவரசம்பூ பூத்தாச்சு பொண்ணுக்கு சேதி வந்தாச்சு” என்ற பாடலில் ஆகட்டும்,

“அந்த நிலாவத்தான் கையில புடிச்சேன்” என்ற திரைப் பாடல் ஆகட்டும் மெட்டு புதிது, இசை புதிது, ராகம் புதிது. திரை உலகம் இதுவரை காணாதது!

கிராமபுறங்களில் கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளில் தனது சகோதரர் பாவலரோடு சேர்ந்து கிராமப்புற மக்களிடம் கற்றுக் கொண்ட பாடங்களை கற்பனைத் திறன் கொண்டு வளர்த்தெடுத்தார் இவர். எனவே இசைக்கென இவருக்கு விருதுகளை, பதவிகளை நாம் கேள்விக்குள்ளாக்கவில்லை.

அப்படி எனில், இளையராஜா மீது விமர்சனம் இல்லை என்பதல்ல இதன் பொருள்.

இசை ஆர்.எஸ்.எஸ். ராகமாக, மெட்டாக திரிந்து விடக் கூடாது என்பதுதான் கவலை. ஏனெனில் இசைக்கு சாதியும் இல்லை, மதமும் இல்லை.

தமிழகத்தின் மாபெரும் கலைஞர்கள் சமூக அவலங் களுக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் என்பதனை இளை யராஜா உணர வேண்டுகிறோம். என்.எஸ்.கே., எம்.ஆர்.ராதா, எஸ்.எஸ். ஆர்., அண்ணா, எம்.ஜி.ஆர்., கமல் என அனைவருமே சமூக அவலங்களை எதிர்த்தவர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடு மிக நெருக்கம் கொண்ட நடனக்கலைஞர் உதயசங்கர், சேர்ந்திசை புகழ் எம்.பி. சீனிவாசன், சகஸ்ரநாமம், டி.கே.எஸ்., கே. சி.எஸ்., ஜெயகாந்தன், பட்டுக்கோட்டை தமிழ்ஒளி, திருச்சி தியாகராஜன், கோமல் என அனைவருமே சமூக அவலங்களை எதிர்த்தவர்கள்.

சமூக அவலங்களை எதிர்த்த கலைஞன் கார்கி போல் எவருமில்லை. ஷெல்லி, பூசிக், நெருடா என இதன் பட்டியல் மகத்தானது.

சாப்ளின் சிறிய உருவம் கொண்டு உலகின் பெரிய ஏகாதிபத் தியங்களை நகையாடினார். எழுத்துலக மேதை பெர்னாட்ஷா, இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு கலைத் துறை மூலம் நியமிக்கப்பட்டவர் தான். ஆனால் அரசுக்கு எதிராகத் தான் அவர் குரல் எழுப்பினார். சோவியத் யூனியனுக்கு ஆதரவுக் குரல் எழுப்பினார்.

தனது விருதுகளை தூக்கி எறிந்து வியட்நாமுக்கு ஆதரவு தெரிவித்து, அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்தார் மாபெரும் குத்துச்சண்டை வீரர் முகமது அலி.

எந்த கலைஞராகட்டும், எவ்வளவு பெரிய விற்பன்னர் ஆகட்டும், நிலவும் அநீதிகளை எதிர்க்க வில்லை என்றால் சமூகத்திற்கு பயன் இல்லை.



## போராடும் இலங்கை மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

இலங்கையில் முன்னெப்போதும் ஏற்படாத அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்திய, ஊழல் கறை படிந்த, ஆளும் வர்க்கத்தின் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு அதன் ஆதரவைத் தெரிவிக்கிறது.

இப்போது நடைபெற்று வரும் போராட்டங்கள் முற்போக்கான, மக்கள் நலன் காக்கக் கூடிய ஒரு தீர்வை நோக்கி நகர்த்திச் செல்லும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. இவ்வாறு தேசிய செயற்குழு சார்பில் வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.












## வலை வீச்சு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 16.07.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# மாவட்ட மாநாடுகள்

**நெல்லை :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட 24வது மாநாடு 2022 ஜூலை 4, 5 ஆகிய தேதிகளில் வள்ளியூரில் நடைபெற்றது. முதல் நாள் மாலையில் பேரணியும், தூத்துக்குடி சகா கலைக்குழுவின் கிராமிய நடனம், இசை நிகழ்ச்சியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமை தாங்கினார். மாநிலத் துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இரண்டாம் நாள் காலை மாநாட்டுக் கொடியை கே.முருகன் ஏற்றி வைத்தார்.

ஏ.சேதுராமலிங்கம், ஏ.இராமகிருஷ்ணன், பி.சபியாள் ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டனர். கே.எஸ். பாலு தியாகிகள் ஸ்தூபிக்கு முதல் அஞ்சலி செலுத்தினார். செ.லட்சுமணன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். சேதுராமலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். மூத்த தோழர்களுக்கு சிறப்பு செய்து மாநாட்டு துவக்க உரையை சி. மகேந்திரன் ஆற்றினார். மாவட்ட அரசியல், வேலை, அமைப்பு நிலை அறிக்கையை எஸ்.காசி விசுவநாதன் வாசித்தார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்டச் செயலாளராக சி.லெட்சுமணன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

நெல்லை மாவட்டத்தை தொழில் துறையில் மேம்படுத்துதல்

நெல்லை மாவட்டம் தொழில் ரீதியில் மிகவும் பின் தங்கிய மாவட்டம். இதன் விளைவாக பல்வேறு ஜாதி மதப் பிரச்சினைகள் ஏற்படும் என்ற காரணத்தினால் தொழில் துறையை மேம்படுத்த வேண்டும் என்று 1996ஆம் ஆண்டு ரத்னவேல் பாண்டியன் கமிஷன் உத்தரவிட்டது. இதனுடைய விளைவாக நாங்குநேரி யிலும்,கங்கை கொண்டானிலும் நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழில் பூங்கா உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நாங்குநேரியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் ஜீயரிடமிருந்து கையகப்படுத்தப்பட்டது. கங்கைகொண்டன் தொழில்துறை பூங்கா செயல்பட தொடங்கினாலும் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு விட்டது. ரயில் பெட்டி தொழிற்சாலை உருவாக்குவோம் என்று சொன்ன அரசு அதனை உருவாக்கவில்லை. பயன்பாடு இல்லாமல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக கிடைக்கின்றன.

புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை . பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி பகுதியில் உடனடியாக தொழில் பூங்கா செயல்பட மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பீடி தொழிலையும் தொழிலாளர்களையும் பாதுகாக்க ..

நெல்லை மாவட்டத்தில் 5 லட்சம் பீடித் தொழிலாளர்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது . புகையிலையிலிருந் இருந்து மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக என விளம்பரப்படுத்தும் ஒன்றிய அரசு கார்ப்பரேட் சிகரெட் கம்பெனிகளுக்கு ஆதரவாக வெளிப்படையாக செயல்படுகின்றது. பீடிக்கும் சிகரெட்டுக்கு ஒரே அளவான 28 % ஜிஎஸ்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு புகையிலை கட்டுப்பாட்டு சட்டம் ஒருதலைப்பட்சமாக செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ள பீடி தொழிலையும் தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும்.

தொழில்களை தொடங்க ..

15 லட்சத்திற்கும் மேல் ஜனத்தொகை கொண்ட நெல்லை மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் லட்சக்கணக்கான பேருக்கு சரியான வேலை கிடைக்கவில்லை . இதனால் சமூக விரோதச் செயல்கள் பெருக வாய்ப்புகள் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கனிம வளங்கள் நிரம்பிய நெல்லை மாவட்டத்தில் உடனடியாக வளங்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட 24ஆவது மாநாடு கேட்டுக் கொள்கிறது.

கட்டுமான தொழிலை பாதுகாக்க ..

நெல்லை மாவட்டத்தில் கனிம வளங்கள் எடுப்பதும் முறைப் படுத்தப்பட வேண்டும் . முறையற்ற செயல்பாடுகள் சமீபத்தில் நடைபெற்ற குவாரி விபத்தின்போது அரசின் கவனத்திற்கு தெரியவந்தது. இதனுடைய தொடர்ச்சியாக முறைப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப் பட்ட பின்பு எம்சாண்ட் சல்லி போன்ற கட்டுமான தொழிலுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் விலை கண்மூடித்தனமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் கட்டுமான பணிகள் முடங்கி விட்டன. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு வாழ்வுரிமையும் பறிக்கப்படுகிறது. எனவே தமிழக அரசு கட்டுமான தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தி தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

சாலை, குடிநீர் வசதிகளை செய்து தர வலியுறுத்தி..

நெல்லை மாவட்டத்தில் நகரப் பகுதிகள் மட்டுமின்றி கிராமப் பகுதிகளில் கூட சரியான சாலை வசதிகள் இல்லை. ஸ்மார்ட் சிட்டி என சொல்லப்படுகிற நெல்லை மாநகரத்தில் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளது. மாவட்டத்தின் தலைநகரில் இந்த நிலை என்றால் மாவட்டத்தின் பிற நகர, கிராமப்புற சாலைகள் மிகவும் சீர்கெட்ட நிலையிலேயே உள்ளது.

எனவே தமிழக அரசு சாலை மேம்பாட்டு பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சாலைகளை செப்பனிட்டு செயல்படுத்த வேண்டும்.

தாமிரபரணி அதன் உப நதிகள் பாய்கின்ற நெல்லை மாவட்டத்தில் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற நிலையை மாற்ற வேண்டும். அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு உள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தை முறையாக செயல்படுத்த வேண்டும். குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையிலிருந்து மாற்றி நிரந்தரப்படுத்த வேண்டும்.

நெல்லை மாவட்டத்தில் புகழ் மிக்க தாமிரபரணி நதியில் கழிவுகளை கொட்ட அனுமதிக்கக்கூடாது. நதியை சுத்தப்படுத்த மாவட்ட நிர்வாகம் முயற்சிகளை எடுத்தும் போதுமான அளவிற்கு சுத்தப்படுத்த படவில்லை என்பதே மக்களுடைய எண்ணமாக உள்ளது. போர்க்கால அடிப்படையில் தாமிரபரணியை சுத்தப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தென்காசி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தென்காசி மாவட்டத்தின் முதல் மாநாடு ஜூலை 6, 7 தேதிகளில் புளியங்குடி அரபி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு சிவகிரியில் இருந்து கொண்டுவரப்பட்ட தியாகிகள் நினைவு ஜோதியை மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி, பெற்றுக்கொண்டார். ராமநாதபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பி.பொன்னுச்சாமி நினைவு ஜோதியை மாநில நிர்வாக குழு உறுப்பினர் டி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., பெற்றுக் கொண்டார். கீழ ஆம்பூர் தியாகிகள் நினைவு ஜோதியை மூத்த தோழர், கருப்பையா பெற்றுக்கொண்டனர். சங்கரன்கோவில் இருந்து கொண்டு வரப்பட்ட மாநாட்டு கொடியை மூத்த தோழர் கி.சங்கரையா பெற்றுக் கொண்டனர்.

பிரதிநிதிகள் மாநாட்டிற்கு தோழர்கள், எஸ்.மாரியப்பன், பி.பாலசுப்ரமணியன், எஸ்.பாக்கியம் ஆகியோர் தலைமை குழுவாக இருந்தனர். மூத்த தோழர் ஏ.சாமி மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார்.

மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார்.

மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை வேலை, அமைப்புநிலை அறிக்கைகளை முன் வைத்தார்.

மாவட்ட செயலாளராக த.இசக்கித்துரை தேர்வு செய்யப்பட்டார்.

மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி, மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், டி.இராமசாமி எக்ஸ்.எம். எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

7ம் தேதி மாலை 4 மணிக்கு வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர் தோழர் ப.வேலு தலைமையில் புளியங்குடி, சிந்தாமணி பேருந்து நிலையம் முதல் டி.என்.புதுக்குடி ஜீவா திடல் வரை செம்படை பேரணி நடைபெற்றது . பேரணியில் செந்தொண்டார் அணிவகுப்பை மாவட்ட பொறுப்பாளர்கள் இ.மதன்குமார், எல்.வேல்முருகன் ஆகியோர் சிறப்பாக வழி நடத்தினர். 700க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்று எழுச் சிமிக்க செம்படை பேரணியாக அமைந்தது.

மாநாட்டு மேடையில் தென்காசி மாவட்ட குழுவின் பயன்பாட்டிற்காக 20 ஆயிரம் மதிப்புள்ள ஸ்பீக்கர் மைக் செட்டை, பீடி சங்க தலைவர், கே.எஸ்.பாலு, அவரது மகன் கடையம் ஒன்றிய குழு உறுப்பினர் பா.சந்தானம் ஆகியோர் அன்பளிப்பாக வழங்கினர்.

அதைத்தொடர்ந்து மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா வரவேற்புரையாற்றினார். மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், நெல்லை மாவட்ட செயலாளர் சி.லட்சுமணன், வங்கி ஊழியர் சங்க செயலாளர் ஆர்.ரங்கன், மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசிவிஸ்வநாதன் ஆகியோர் மாநாட்டில் சிறப்புரையாற்றினர். வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர் ப.வேலு நன்றியுரையாற்றினார்.

மாவட்ட தலைமை இடத்தில் மருத்துவ கல்லூரியுடன் கூடிய மருத்துவமனை அமைத்திட வேண்டும்.

புளியங்குடியில் எலுமிச்சை பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்திடவும்.

மூடப்படும் நிலையில் உள்ள தரணி தனியார் சர்க்கரை ஆலையை அரசே எடுத்து நடத்திட வேண்டும்.

செண்பகவல்லி அணை உடைப்பை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

காட்டுநாயக்கன் சமுதாய மக்களுக்கு பழங்குடியின ஜாதி சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.


மோடி, ஆர்.எஸ்.எஸ்.சின் ஒன்றிய இராஜ்யம்
போராடிப் பெற்ற தமிழ்நாட்டு உரிமைகளுக்கு பூஜ்யம்!
திருப்பூரில் ஆகஸ்ட்
6, 7, 8, 9 தேதிகளில்
சங்கமிப்போம்!
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.